பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

VALAMPURI

விலை ரூபா.7.00

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | தை 06 | செவ்வாய்க்கிழமை | (20-01-2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 32

ராம்கோ சிமெந்து

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

ஆசியாக் கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.



கிளிநொச்சியில் உள்ள விடுதலைப் புலிகளின் அரசியல் துறை நடுவப் பணியகத்தில் நேற்று நடைபெற்ற சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட கூட்டத்தின் சில காட்சிகள்.

# அதிகாரமுடைய அரசாங்கத்துடன் விடுதலைப் புலிகள் பேசத் தயார்!

## சர்வதேசப் பிரதிநிதிகள் முன்னிலையில் தமிழ்ச்செல்வன் உரை

(கிளிநொச்சி)

**ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்குமிடையிலான அரசியல் இழுபறிநிலை யுத்த நிறுத்த உடன்பாட்டிற்குப் பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தியிருப்பதாக, தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.**

கிளிநொச்சியில் உள்ள விடுதலைப் புலிகளின் அரசியல் துறை நடுவப் பணியகத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட கூட்டத்திற்கு தலைமை தாங்கி உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சரித்திரம் முக்கியத்துவம்

ஹரோல்ட், ஐரோப்பிய யூனியன் பிரதிநிதி, யப்பான் தூதரக பிரதிநிதிகள், நோர்வே, நெதர்லாந்து, சுவிஸ்லாந்து பிரதிநிதிகள் மற்றும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிகள் உட்பட 30ம் மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இக் கூட்டத்தில் தொடர்ந்து கருத்து தெரிவித்த சு.ப.தமிழ்ச்செல்வன் மேலும் கூறியதாவது,

நெருக்கடிக்கு உள்ளாகி வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எம் மக்கள் பொறுமை இழக்கும் நிலைக்கு வந்துள்ளனர் அவர்களின் உணர்வுகளுக்கு பதில் அளிப்பதற்கான தார்மீகக் கடமைப்பாட்டை நாம் கொண்டுள்ளோம்.

சமாதான முன்னெடுப்புக்களை உறுதிப்பாட்டுடன் முன்னெடுப்பதற்கு பூரண அதிகாரமும், சமாதா

### சு.கட்சி—ஜே.வி.பி கூட்டுக்கு பௌத்த பீடாதிபதிகளிடம் ஆசிபெற்றார் ஜனாதிபதி

(கொழும்பு)

நாட்டின் தற்போதைய அரசியல் நெருக்கடி நிலையின் மத்தியில் ஜனாதிபதி நேற்றுமுன்தினம் மல்வத்தை, அஸ்கிரிய பீடாதிபதிகளுடன் சந்திப்பொன்றை நடத்தியுள்ளார். மல்வத்தை பீடாதிபதி

நடத்தியுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பிக்குமிடையில் இன்று கைச்சாத்திடப்படவிருக்கும் கூட்டு உடன்படிக்கை பற்றி எடுத்துக் கூறும் பொருட்டும், தமது கூட்டு

உதவி வழங்கும் சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட கூட்டத்திற்கு தலைமை தாங்கி உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சரித்திரம் முக்கியத்துவம் வாய்ந்த இந்தக் கூட்டத்தில் விடுதலைப்புலிகளின் பொருளியல் ஆலோசகர் ஜே.மகேஸ்வரன், சிரான் பணிப்பாளர் செல்வின், விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோர் விடுதலைப் புலிகள் சார்பில் கலந்து கொண்டனர்.

சர்வதேச நாடுகளின் சார்பில் உலகவங்கியின் பிரதிநிதி பீற்றர் ...து பிரதிநிதிகள் மற்றும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிகள் உட்பட 30ம் மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இக் கூட்டத்தில் தொடர்ந்து கருத்து தெரிவித்த சு.ப.தமிழ்ச்செல்வன் மேலும் கூறியதாவது.

கடந்த இரண்டு வருடங்களாக நாம் இராணுவத்தின் ஆத்திரம் ஊட்டும் நடவடிக்கையின் மத்தியில் மிகுந்த பொறுமையுடனும், சமாதானத்தில் பற்றுறுதியுடனும் யுத்தநிறுத்த உடன்பாட்டைப் பேணிவருகிறோம் ஆனாலும் கடந்த இரண்டு தசாப்த காலமாக யுத்தம் ஏற்படுத்தியுள்ள வடுக்களை சுமந்து கொண்டு வந்துள்ளனர் அவர்களின் உணர்வுகளுக்கு பதில் அளிப்பதற்கான தார்மீகக் கடமைப்பாட்டை நாம் கொண்டுள்ளோம்.

சமாதான முன்னெடுப்புக்களை உறுதிப்பாட்டுடன் முன்னெடுப்பதற்கு பூரண அதிகாரமும், சமாதானத்திற்கான மக்கள் ஆணையும் கொண்ட இலங்கை அரசின் தலைமைத்துவத்துடன் நாம் பேசுவதற்கு தயாராக உள்ளோம். ஆனால் தென்னிலங்கை அரசியலில் இழுபறிநிலை இருப்பதும் எமது மக்களின் மனிதாபிமானமான அவசரத் தேவைகள் தீர்க்கப்படாது இருப்பதும் எதிர்காலத்தில் சமாதான முயற்சிகளை தொடரக்

(12ஆம் பக்கம் பார்க்க)

(கொழும்பு)

நாட்டின் தற்போதைய அரசியல் நெருக்கடி நிலையின் மத்தியில் ஜனாதிபதி நேற்றுமுன்தினம் மல்வத்தை, அஸ்கிரிய பீடாதிபதிகளுடன் சந்திப்பொன்றை நடத்தியுள்ளார். மல்வத்தை பீடாதிபதி வண.ரம்புக்வெல விபசிதேரர், அஸ்கிரிய பீடாதிபதி உடுகம சிறீ புத்திரகித்த தேரர் ஆகியோருடன் ஜனாதிபதி கண்டியில் பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பிக்குமிடையில் இன்று கைச்சாத்திடப்படவிருக்கும் கூட்டு உடன்படிக்கை பற்றி எடுத்துக் கூறும் பொருட்டும், தமது கூட்டு முன்னணியின் நடவடிக்கைகளுக்கு ஆசிபெறும் பொருட்டுமே ஜனாதிபதி மல்வத்தை அஸ்கிரிய பீடாதிபதிகளைச் சந்தித்துள்ளார்.

(து)

# சு.க.-ஜே.வி.பி கூட்டு ஒப்பந்தம் இன்று கைச்சாத்திடப்படுகிறது

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கும், மக்கள் விடுதலை முன்னணிக்கும் (ஜே.வி.பி) இடையிலான கூட்டமைப்பு ஒப்பந்தம் இன்று காலை 10 மணிக்கும் 10.30 மணிக்கும் இடையிலான சுப வேளையில் கைச்சாத்திடப்படவுள்ளது என்று மேல் மாகாண ஆளுநர் அலவி மௌலானா தெரிவித்துள்ளார்.

கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபகுழு அறையில் இவ் உடன்படிக்கை கைச்சாத்திடப்படவுள்ளது. இவ் வைபவத்தில் முக்கியஸ்தர்கள் பலர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதேவேளை ஜே.வி.பியினரின் தலைவர் சோமவன்ச அமரசிங்காவும் லண்டனில் இருந்து இன்று இலங்கை வரவுள்ளதாக ஜே.வி.பி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(ம)

# புலிகள் தயாரித்த வடக்குக் கிழக்கு அபிவிருத்தித் திட்டம் தந்திரம் மிக்கது

## சிஹல உறுமய குற்றச்சாட்டு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு நேரடியாக வெளிநாட்டு உதவிகளை வழங்குவதற்கு ஐரோப்பிய நாடுகள் தயாராகி வருவதாக சிஹல உறுமய குற்றஞ்சாட்டியுள்ளது.

விடுதலைப் புலிக்ளுக்கு நேரடியாகவோ அல்லது இலங்கை அரசாங்கத்தின் மூலமாகவோ வழங்கப்படும் நிதியுதவிகள் அவர்களை இராணுவ ரீதியாக மேலும் பலப்படுத்துவதற்கே வழி செய்யும்.

வடக்குக் கிழக்கை அபிவிருத்தி செய்யப் போவதாகக் கூறி விடுதலைப் புலிகள் தயாரித்துள்ள அபிவிருத்தித் திட்டம் மிகவும் தந்திரம் மிக்கதாகும். வடக்குக் கிழக்கில் தமது இராணுவ ஏகாதிபத்தியத்தை நிலை நிறுத்த புலிகள் சாதுரியமாகச் செயற்பட்டு வருகின்றனர்.

ஐரோப்பிய சமூகம் விடுதலைப் புலிகளுக்கு நேரடியாக நிதியுதவி வழங்குவதன்மூலம் விடுதலைப் புலிகள் சர்வதேச அங்கீகாரத்தைப் பெறுவதற்கு வழி சமைப்பதாக அமையப்போகிறது.

எனவே அரசியல் பேதங்களை மறந்து இச்சதித்திட்டத்தைத் தோற்கடிக்க அனைத்து அரசியல் கட்சிகளும் முன்வர வேண்டும் என சிஹல உறுமய கோரிக்கை விடுத்துள்ளது.

(த)

# ஜனாதிபதி மீது குற்றப்பிரேரணை கொண்டுவர அரசாங்கம் முயற்சி

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகாவுக்கெதிரான அரசியல் குற்றப்பிரேரணை ஒன்றைக் கொண்டுவருவதற்கான முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்குமிடையில் ஏற்பட்டிருக்கும் அதிகாரப் போட்டியின் மத்தியில் ஜனாதிபதியைப் பதவியில் இருந்து அகற்றுவதற்கான அரசியல் குற்றச்சாட்டுப் பிரேரணையை அரசாங்கம் தயாரித்துவருகின்றது.

இக்குற்றச்சாட்டுப் பிரேரணையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு தமது கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரது ஆதரவையும் திரட்டும் நோக்குடன் கையொப்

(12ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சமாதான சிரமதானம்

(யாழ்ப்பாணம்)

நேற்றுமுன்தினம் ஒஸ்மானியாக் கல்லூரியில் இடம்பெற்ற சமாதான சிரமதானத்தில் நூற்றுக்கும் அதிகமானோர் பங்கு கொண்டனர்.

கியூடெக் இணைப்பாளர் சி.ஜி.ஜெயக்குமாரின் ஒழுங்கு படுத்தலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் முஸ்லிம் மக்கள் பணிமனை உறுப்பினர்கள் பலரும் பங்கேற்றனர்.

இந்நிகழ்வில் மேற்படி பாடசாலையின் நூல் நிலையத்திற்கென ஒரு தொகுதி நூல்களும் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

இதேவேளை, இப்பாடசாலைப் புனரமைப்புப் பணிகள் நாளை ஆரம்பமாகவுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (உ-7)

## செயற்குழுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கச்செயற்குழுக் கூட்டம் நாளை பல்கலைக்கழக ஊழியர் சங்க பொது அறையில் நடைபெறவுள்ளது.

இச் செயற்குழுக் கூட்டத்தில் ஊழியர்களது கோரிக்கைகளுக்கு தீர்வு கிடைக்காத பட்சத்தில் வேலை நிறுத்தம் செய்வது பற்றி ஆராயப்படவுள்ளதாக ஊழியர் சங்கத்தலைவர் சி.தங்கராசா தெரிவித்தார்.

இதேவேளை எதிர்வரும் 26ம் திகதி அனைத்துப் பல்கலைக்கழக ஊழியர் சங்க சம்மேளன பிரதிநிதிகளுக்கும், யாழ் பல்கலைக்கழக ஊழியர் சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையில் சந்திப் பொன்று நடைபெறவுள்ளது.

இச் சந்திப்பின் போது யாழ் பல்கலைக்கழக ஊழியர்களின் பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. (ச-7)

# பழைய இரும்பினால் பெருமளவு இலாபம

### புகையிரத அதிகாரசபை ஈட்டியது

(கொழும்பு)

புகையிரத அதிகாரசபைக்கு சொந்தமான பழைய இரும்புப் பொருட்களை விற்பனை செய்ததன் மூலம் 162 மில்லியன் ரூபாவை தாம் வருமானமாக பெற்றுள்ளதாக புகையிரத அதிகாரசபையின் தலைவர் சட்டத்தரணி ஹேமச் சந்திர மஹதுங்க தெரிவித்துள்ளார்.

பாவனைக்காக கொள்வனவு செய்து பயன்படுத்திய பின்னர் கைவிடப்பட்ட நிலையில் நீண்ட காலமாக புகையிரத அதிகார சபையிடம் காணப்பட்டன.

இவற்றை சர்வதேச மட்டத்தில் கேள்விப் பத்திரம் கோரி விற்பனை செய்யப்பட்டது. இதன் மூலம் மேற்படி தொகையை தாம் இலாபமாக பெற்றுள்ளதாக தெரிவித்த அவர். இந்நிதி புகையிரத சேவையின் அபிவிருத்திகளுக்கு பயன்படுத்தப்படும் என்றார். (உ- 4)

# யாழ். பல்கலைக்கழகத்தில் இறால் வளர்ப்பு செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

சிலாபம் அக்குவா சேவிஸ் நிறுவனமும், யாழ்.மாவட்ட போரூட் நிறுவனமும் இணைந்து, யாழ் குடாநாட்டில் இறால் வளர்ப்பில் ஈடுபடவுள்ள ஆர்வலர்களுக்கு இருநாள் செயலமர்வை நடாத்தவுள்ளதாக, யாழ்.பல்கலைக்கழக கடல்வள அபிவிருத்தி நிலைய இணைப்பாளர் பேராசிரியர் கே.சித்திரவடிவேல் தெரிவித்துள்ளார்.

யாழ் பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் அடுத்த மாதம இரண்டாம் திகதி செயலமர்வும், மூன்றாம் திகதி குடாநாட்டில் இறால் வளா்ப்புக்கான இடங்களைத் தெரிவு செய்யும் நிகழ்வும் இடம் பெறுமென்றும், இதற்கான ஏற்பாடுகளை யாழ்.பல்கலைக்கழக கடல்வள அபிவிருத்தி நிலையம் மேற்கொண்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இச் செயலமர்வை நடாத்துவதற்காக சிலாபம் அக்குவா சேவிஸ் நிறுவனத்தின் இயக்குநர் எஸ்.தயாபரன் தலைமையிலான குழுவினர் யாழ்ப்பாணம் வரவுள்ளனர்.

இச் செயலமர்வில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் யாழ். பல்கலைக்கழக கடல்வள அபிவிருத்தி நிலையத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று அதனைப் பூர்த்தி செய்து எதிர் வரும் 23ம் ஆம் திகதிக்கு முன்னர் நிலையத்தில் ஒப்படைக்க வேண்டுமென்றும் பேராசிரியர் சித்திர வடிவேல் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

## இலங்கைக்கு ஈரான் உதவி

(கொழும்பு)

இலங்கைக்கு பல கடன் உதவிகளைச் செய்ய ஈரான் அரசாங்கம் முன்வந்துள்ளது.

அண்மையில் பாராளுமன்ற விவகார அமைச்சர் எம்.எச்.எம். அஸ்வரை அவரது அலுவலகத்தில் வைத்து சந்தித்த ஈரானிய முஸ்லிம் குடியரசின் இலங்கைக்கான தூதுவர் பெஹ்மை தெஹ்றுன் இத்தகவலை அவரிடம் தெரிவித்துள்ளார். (உ-4)



இல.86 யாழ்.- பருத்தித்துறை வீதியில் நேற்று நிகழ்ந்த சேரண்டிப் ஏயர் லைன்ஸ் நிறுவனத்தின் திறப்பு விழா காட்சிகள்.

வலம்புரியின் வாரமலர் பக்கங்கள் - 20 விலை :-16.00
சங்கு நாதம்
(19-25 ஜனவரி 2004) Sankunatham
சங்கு :-03 வள்ளுவர் ஆண்டு 2035 தொலைபேசி :- 2223378 நாதம் :-45


அரசியல் - அறிவியல் - ஆன்மீகம் அதுவே உங்கள் சங்குநாதம்.
திங்கள் வைகறையில் உங்கள் உள்ளங்களில் ஒலிப்பது
விலை ரூபா. 16.00

சங்குநாதம்
தேர்தல் வரும் சாத்தியம் உண்டா?
இலங்கையைப் பாதுகாக்க இந்தியாவுடன் ஒப்பந்தம்
மீண்டும் சூடு பிடிக்கும் ஸ்ரீ.சு.கட்சி - ஜே.வி.பி கூட்டு
ஆலடி மாநாடு
வியாசரின் பதில்கள்
கே.வி.குணசேகரம் எழுதும் கல்தூண்கள்...
(தொடர்கதை)
மற்றும் பல அம்சங்களுடன்
வாசிக்கத் தவறாதீர்கள்
சங்குநாதம்

### ஜே.வி.பி - ஸ்ரீ.சு.க.கூட்டு

# நெடுந்தூர அரசியல் பயணத்திற்கான அர்த்த புஷ்டியான ஆரம்பம் - அனுரா

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஜே.வி.பியினருடன் இன்று செய்து



கொள்ளவுள்ள கூட்டு உடன்படிக்கை நெடுந்தூர அரசியல் பயணத்திற்கான அர்த்த புஷ்டியான ஆரம்பமாக இருக்கும் என முன்னாள் சபாநாயகரும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் பொது ஜன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினருமான அனுரா பண்டார நாயக்கா தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையில் செய்து கொள்ளப்படவுள்ள கூட்டு உடன்படிக்கை பற்றி ஊடகம் ஒன்றிற்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் இது பற்றி தொடர்ந்து கருத்து வெளியிடுகையில்,

இக் கூட்டு உடன்படிக்கையானது நாட்டின் அரசியல் முன்னேற்றப்பாதையில் தீர்க்கமான மைல்கல்லாக இருக்கும்.

அத்துடன், இரு கட்சிகளும் கூட்டுச் சேர்வதனால் கடந்த 50 ஆண்டுகளில் அடையப்பெறாத பல நோக்கங்கள் சாத்தியப்படும் என நான் நம்புகின்றேன்.

இன்று செய்து கொள்ளப்படவுள்ள ஒப்பந்தமானது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தக்க தருணத்தில் இத்தகைய தீர்மானத்தை எடுத்திருப்பது பாராட்டத் தக்கது.

ஆயினும் இவ் ஒப்பந்தம் நாட்டின் பிரதேச கௌரவம், சமாதானம், நீதி ஆகியவற்றுக்கு மதிப்பளிக்க வேண்டும் இந்த குறிக்கோள்களில் இருந்து விலகிச் செல்வதற்கு இடமளிக்கப்படக்கூடாது என்று அவர் மேலும் கேட்டுக் கொண்டார்.

(உ-60,10)

# விடுதலைப் புலிகளின் உறுதி மொழி உள்ளூராட்சி தேர்தலுக்கான வழி

## அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு

(கொழும்பு)

யுத்த நிறுத்தத்தை தொடர்ந்தும் கடைப்பிடிப்போம் என தமிழீழ விடுதலைப்புலிகள் மீண்டும் உறுதி அளித்துள்ளமையால், வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்த முடியும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சித் தலைவரும் கப்பல்துறை மற்றும் துறைமுக அபிவிருத்தி அமைச்சருமான ரவூப்ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடவுள்ள முஸ்லிம் குழுவினரை அம்பாறையில் சந்தித்து உரையாடியபோதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் தொடர்ந்தும் இது குறித்துக் கருத்துக் கூறுகையில்,

பிரதமர் ரணில் விக்கிரம சிங்க சமாதான முயற்சியில் இருந்து விலகிக்கொண்டாலும் யுத்த நிறுத்தத்தை தாம் தொடர்ந்தும் கடைப்பிடிக்கவுள்ளதாக விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் மற்றும் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் ஆகியோர் நோர்வே தரப்பினரிடம் உறுதியளித்துள்ளனர்.

எனவே, வடக்குக் கிழக்கு மாகாணத்திலும் உள்ளூராட்சித் தேர்தலை நடத்த தேர்தல் ஆணையாளர் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அத்துடன், தேர்தலின் போது ஏற்படும் வன்முறைகளை கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் பொலிஸாரை ஈடுபடுத்த ஜனாதிபதி



தயாராகவேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

(உ- 60,10)

# ஜே.வி.பியுடனான கூட்டு சமாதான முயற்சியை பாதிக்கும்

## அமைச்சர் மகேஸ்வரன் எதிர்வு கூறல்

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணிக்கும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கும் இடையே கூட்டமைப்பை ஏற்



படுத்துவதனால், நாட்டின் பொருளாதாரமும் சமாதானமும் பாதிப்படையும் என இந்து சமய கலாசார விவகார அமைச்சர் தி.மகேஸ்வரன் எதிர்வு கூறியுள்ளார்.

இக் கூட்டமைப்புக் குறித்து அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

'மக்கள் விடுதலை முன்னணியுடன் தொடர்புடைய அரசாங்கம் ஒன்று உருவாக்கப்பட்டால், இந்த நாட்டுக்குக் கிடைக்கும் வெளிநாட்டு உதவிகள் நிறுத்தப்படும் அபாயம் ஏற்படும்.

அத்துடன் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ள முன்வந்திருக்கும் வெளிநாட்டு நிறுவனங்கள் பல தமது முதலீடுகளைச் செய்ய முன்வரா.

இந்தக் கூட்டமைப்புக் குறித்து தமிழ் மக்கள் எந்தவித எதிர்பார்ப்புக்களையும் நம்பிக்கைகளையும் கொண்டிருக்கவில்லை. மாறாக அவர்கள் இதனை ஒரு யுத்தத்திற்காக முன்வைக்கப்படும் கூட்டாகவே கருதுகின்றனர்.

இக் கூட்டமைப்பின் முக்கிய நோக்கம் யாதெனில் கடந்த பொதுத் தேர்தல் மூலம் மக்களின் ஆணையைப் பெற்ற ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தை வீழ்த்துவதே ஆகும்.

பல்வேறு கொலைச் சம்பவங்களுடன் தொடர்புடையவரும், குற்றத்தடுப்புப் பிரிவுப்பொலிஸாரினால் கடந்த 15ஆண்டுகளாக தேடப்பட்டு வருபவருமான சோமவன்ச அமரசிங்கவை ஜனாதிபதி இங்கிலாந்தில் இருந்து வரவழைக்கிறார். இதனை நாட்டுக்கு ஏற்படும் அபகீர்த்தியாகவே நான் கருதுகின்றேன் என்றார்.(தி-60)

# பாடசாலைகள் மூடப்பட அதிபர்களே காரணம்

## பாடசாலைக் கல்வியமைச்சர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

கிராமப்புறப் பாடசாலைகள் மூடப்படும் அபாயம் தோன்றியுள்ளமைக்கு பாடசாலை அதிபர்களின் மோசடிகளும், அலட்சியப் போக்குகளுமே காரணம் என்று பாடசாலைக் கல்வி அமைச்சர் சுரநிமல ராஜபக்ஷ குற்றம் சாட்டியுள்ளார்.

பாடசாலை நிர்வாகங்களில் அரசியல்வாதிகளின் தலையீடுகள் காணப்படுகின்றதால் அவர்கள் பாடசாலைகளின் நிர்வாகச் செயற்பாடுகளில் செல்வாக்கைச் செலுத்துகின்றனர். இது மாணவர்களின் கல்வி மேம்பாட்டிலும் பாரிய பின்னடைவு களை உருவாக்கியுள்ளது. இதனால் நாட்டில் எத்தனையோ பாடசாலைகள் மூடப்படும் அபாயம் தோன்றியுள்ளது.

இதைவிட, கல்வி மேம்பாடுகளுக்காக அரசு பல கோடிக்கணக்கான நிதியைச் செலவிடுகிறது. இச் செலவுகள் உரியவர்களைச் சென்றடையாததற்கும் இவ்வாறான தலையீடுகளே காரணம்.

எனவே மாணவர் சமுகத்தினர் எதிர்கால நலன்களை கருத்தில் கொண்டு இவ்வாறான அரசியல் தலையீடுகளுக்கு இடம் கொடாது, பாடசாலை அபிவிருத்திகளுக்காக ஒதுக்கப்படும் நிதிகளில் மோசடி செய்யாது அதிபர்கள் பொறுப்புணர்வுடன் செயற்பட வேண்டுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

(உ- 4)



யாழ்.போதனா வைத்தியசாலை சிறுநீரகச் சிகிச்சைப் பிரிவுக்கு நவீன இரத்த சுத்திகரிப்பு இயந்திரம் வழங்கும் வைபவத்தின்போது எடுக்கப்பட்ட படங்கள்.
படம்: சாந்தன்



10 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் யு.என்.எச்.சி. ஆரினால் புனரமைப்புச்செய்யப்பட்ட பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர் தரப்பாடசாலை வகுப்பறைக் கட்டடத் திறப்பு விழாவில் ,கலந்துகொண்ட யு.என்.எச்.சி.ஆர் குழுத் தலைவர் அடிவாக்கர் மற்றும் கல்வி அதிகாரிகள் ஆகியோர் பாடசாலை சமூகத்தினரால் வரவேற்கப்படுகின்றனர்.




அண்மையில் நடைபெற்ற தும்பளை நாவலர் விளையாட்டுக்குக் கழகத்தின் 30வது ஆண்டு நிறைவு விழா மற்றும் பரிசளிப்பு விழாவில் கழகக் கல்வி அபிவிருத்திக் குழுத்தலைவர் ஆர்.சிவபுண்ணியம் உரையாற்றுவதையும் மேடையில் சாவகச்சேரி மாவட்ட நீதிபதி எஸ்.பி.சுப்பிரமணியம் மற்றும் கழகத் தலைவர் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.



இலங்கை மின்சாரசபையின் யாழ்.மாவட்டப் பொறியியலாளராகக் கடமையாற்றி தற்போது இளைப்பாறிய எஸ். வல்லிபுரத்திற்கு மின் அத்தியட்சகர் எஸ். குகதாஸன் மலர்மாலை அணிவித்துக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம். (படங்கள்:பரு.நிருபர்)

# தேசவழமை


வரலாற்றுத்துறைப் பேராசிரியர்

**சி.பத்மநாதன்**

பேராதனைப் பல்கலைக்கழகம்.


20

முதலாம் பகுதி

### தேசவழமைச் சட்டம்

## யாழ்ப்பாண இராச்சியம்

யாழ்ப்பாண இராச்சியத்திற் கிடைத்த யானைகளும், முத்து, சங்கு, சாயவேர் முதலான பொருள்களும் வணிகராலே தென்னிந்தியக் கரையோரங்களுக்கு ஏற்றிச் செல்லப்பட்டன. முத்து, சங்கு ஆகியன மாதோட்டம், மன்னார் ஆகிய துறைமுகங்களினூடாகவே ஏற்றிச் செல்லப்பட்டன. ஆண்டுதோறும் யானைகளை வன்னியரிடமிருந்து திறையாக அரசர் பெற்றனர். யானைகளை விற்பனை செய்வதால் அவர்களுக்கு அதிக வருமானம் கிடைத்தது. பாண்டியராட்சிக் காலத்திலே தென்னிந்தியப் பிரதேசம் கடல் வழியான சர்வதேச வாணிபத்தின் மிகவும் பிரதானமான மையமாக விளங்கியது. காயல் பட்டினம் அதன் பிரதானமான நிலையமாக அமைந்திருந்தது. சீனம், சாவகம், வங்கம், குர்ச்சரம், பாரசீகம், யவனதேசம், உரோமாபுரி முதலான தேசங்களிலிருந்தும் வணிகக் கப்பல்கள் அங்கு வந்து சென்றன. சேது கரையிலே உற்பவித்த ஆரியச்சக்கரவர்த்திகள் சர்வதேச வாணிப நிலைகளையும் வாணிபத்தாற் கிடைக்கக்கூடிய பலாபலன்களையும் பற்றி நன்கு அறிந்திருந்தனர். வாணிப நடவடிக்கைகளில் அவர்கள் மிகுந்த கவனம் செலுத்தினார்கள்.

பதின்மூன்றாம் நூற்றாண்டிலிருந்து சர்வதேச வர்த்தகத்தில் இடம்பெற்ற வாசனைச் சரக்குகளிற் கறுவா ஒரு பிரதான பொருளாகியது. உணவுப் பொருட்களுக்குச் சுவையூட்டுவதற்கும் மருந்துப் பொருட்களைத் தயாரிப்பதற்கும் அதனைப் பெருமளவிலே பயன்படுத்தத் தொடங்கினார்கள். அராபிய தேசங்களுக்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் அது ஏற்றுமதி செய்யப்பட்டது. பாரசீகம், இந்தியா, சீனா ஆகிய நாடுகளிலுள்ள சந்தைகளிலும் அது கணிசமான அளவிலே விற்பனையாகியது. இலங்கையில் உற்பத்தியான கறுவா தரம் மிக்கதாகக் கொள்ளப்பட்டது. கறுவா மரங்கள் ஈரவலயத்திலுள்ள காடுகளில் இயல்பாக வளர்ந்தன. எனவே அது அரசனின் உடைமையாகக் கருதப்பட்டது. கறுவாப் பட்டைகளை உரித்து அவற்றைச் சுருளாக்கி, உலர்த்தி அரசாங்கத்தின் களஞ்சியங்களிலே ஒப்படைக்கும் பொறுப்பு இராசகாரியமான வேவையாகும். அது சாளியர் என்னும் சமூகத்தவரின் கடமையாகும். அவர்கள் பூர்வீகத்திலே தென்னிந்திய நெசவாளர் என்பது ஐதீகம். கறுவா வர்த்தகத்தில் ஈடுபாடு கொண்டதால் பதினான்காம் நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்த ஆரியச்சக்கரவர்த்திகள் கடற்படை கொண்டு தென்னிலங்கைக் கரையோரங்களினூடாக நடைபெற்ற வாணிபத்தைக் கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டனர்.

இவுன் பத்தூத்தா இலங்கைக்கு வந்த சமயத்தில் ஆரியச்சக்கரவர்த்தியின் ஆதிக்கம் மேலோங்கிய நிலையிற் காணப்பட்டது. அவன் நூற்றுக்கணக்கான நாவாய்களை வைத்திருந்தான்; அவற்றை வாணிபம் செய்வதற்குப் பயன்படுத்தினான். ஒரு சமயத்திலே யெமென் தேசத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்த அவனுடைய நூறு கப்பல்களைக் கண்டதாக இவுன் பத்தூத்தா கூறுவார். ஆரியச்சக்கரவர்த்தி முத்துச் சலாபத்திற்கு அண்மையிலே தங்கியிருந்து முத்துக் குளிப்பை மேற்பார்வை செய்து கொண்டிருந்தான். அவனுடைய துறைமுகங்களில் ஒன்றினூடாகக் கறுவா வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. குன்றங்கள் போலக் காட்சியளிக்கும் வகையிலே கரையோரத்திலே கறுவாவினை அடுக்கியிருந்தனர். மலையாளம், தமிழகம் ஆகியவற்றிலிருந்தும் வருகின்ற வணிகர் துணிகள் முதலானவற்றை ஆரியச்சக்கரவர்த்தியிடம் கொடுத்துவிட்டுக் கறுவாவை ஏற்றிச் சென்றனர். ஆரியச்சக்கரவர்த்தி பாரசீக மொழியிலே பயிற்சி பெற்றிருந்தான். பிற தேசங்களிலுள்ள வாணிப நிலைகளைப் பற்றி அறிந்துகொள்வதில் மிகுந்த ஆர்வம் உடையவனாகக் காணப்பட்டான். பொருளாதார விடயங்களில் ஆர்வம் கொண்ட ஒருவனாகவும் வெளிநாட்டு வாணிபத்திலே நேரடியாகப் பங்கு கொள்வோனாகவும் ஆரியச்சக்கரவர்த்தி காணப்பட்டான். அதன் காரணமாகவே தென்னிலங்கை மீது அவன் தனது கவனத்தைச் செலுத்தினான்.

பதினான்காம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இலங்கையில் நிலவிய அரசியல் நிலை குறித்து ராஜாவலிய மேல்வருமாறு கூறுகின்றது:

"பராக்கிரமபாகு மன்னனின் மருமகன் கம்பளையில் இருந்தான். அழகக்கோனார் என்னும் மந்திரி றயிகமத்திலிருந்தான். ஆரியச்சக்கரவர்த்தி யாழ்ப்பாணப் பட்டினத்தில் இருந்தான். இம்மூவருள்ளும் பின்னவனே படைபலம், செல்வம் என்பவற்றில் முன்னணியில் விளங்கினான். எனவே, கரையோரப் பகுதிகள், மலைநாடு, ஒன்பது துறைமுகங்கள் ஆகியவற்றிலிருந்தும் திறைபெற்றான்".

கீர்த்தி நிசங்க அழகக்கோனார் என்னும் பிரதானி கம்பளையில் அதிகாரம் பெற்ற பின்பு, ஆரியச்சக்கரவர்த்தி தென்னிலங்கையில் ஏற்படுத்தியிருந்த மேலாதிக்கத்தை முறியடித்தான். பதினைந்தாம் நூற்றாண்டிலே ஆறாம் பராக்கிரமபாகுவின் காலத்திற் (1412-1467) கோட்டை இராச்சியம் எழுச்சிபெற்றது. அவனுடைய சேனாதிபதியான செண்பகப்பெருமாள் என்னும் சபுமல் குமாரன் 1450ஆம் ஆண்டளவிலே படையெடுத்துச் சென்று யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றினான். கனகசூரிய சிங்கையாரியன் நாட்டைவிட்டுத் தென்னிந்தியாவிற்கு ஓடி விட்டான். செண்பகப்பெருமாள் யாழ்ப்பாண இராச்சியத்தைப் பதினேழு வருடங்கள் ஆட்சிபுரிந்தான் என்பர். கோட்டையிலே பராக்கிரமபாகு இறந்த பின் செண்பகப்பெருமாள் தனது படைகளோடு தென்னிலங்கைக்குப் போக நேர்ந்தது. அங்கே பழைய அரசனின் ஏற்பாடுகளை நிராகரித்தும், கலகங்களை ஒடுக்கியும் அவன் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டிய நிலை காணப்பட்டது.

செண்பகப்பெருமாள் வெளியேறிச் சென்றதும் கனகசூரிய சிங்கையாரியன் விஜயநகர ராஜர்களின் சாமந்தர்களான நாயக்கரதும் பிற தென்னிந்தியப் பிரதானிகளதும் உதவியுடன் யாழ்ப்பாணத்திற்குத் திரும்பிச்சென்று ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டான். பதினாறாம் நூற்றாண்டிலே யாழ்ப்பாண இராச்சியத்தின் விவகாரங்களிலே போர்த்துக்கேயர் தலையிட்டனர். முதலாம் சங்கிலியன் காலத்திலே (1521-1561) போர்த்துக்கேயருக்கு எதிரான முயற்சிகள் முனைப்படைந்தன. போர்த்துக்கேயருக்கு எதிரான போர்களிலே மாயாதுன்னைக்குச் சங்கிலி ஆதரவளித்தான். தென்னிந்திய நாயக்கரின் உதவிகளையும் வன்னியிலுள்ள சிற்றரசனின் உதவிகளையும்அவனாற் பெற்றுக்கொள்ள முடிந்தது.

(தொடரும்)


**வலம்புரியின் அனுசரணையுடன்**

வட்டுக்கோட்டை-சங்கரத்தை

பாலன் மில் உரிமையாளர்

**இராசையா சோமசுந்தரம்**

அவர்களின் ஞாபகார்த்தமாக நடாத்தப்படும்

**கவிதைப் போட்டி -2004**

1ம் பரிசு தங்கப் பதக்கம்

2ம் பரிசு வெள்ளிப் பதக்கம்

3ம் பரிசு வெண்கலப் பதக்கம்

இவை தவிர மேலும் பல ஆறுதல் பரிசுகள்

விடயம்

**"தமிழா உனக்கேன் இக்கதி"**

**விதிகள்**

- போட்டியாளர் ஒரு கவிதை மட்டுமே போட்டிக்கு அனுப்ப முடியும்.
- விடயத்தில் தரப்பட்ட தலைப்பை பிரதிபலிப்பதாக கவிதைகள் அமைய வேண்டும். (கவிதைக்குள் விடயத் தலைப்புவரி இடம்பெற வேண்டும் என்பது அவசியமில்லை)
- போட்டிக்கவிதை மரபுக் கவிதையாகவோ அன்றி புதுக் கவிதையாகவோ அமையலாம்.
- மரபுக் கவிதையாயின் 12 வரிகளை மட்டும் கொண்டதாகவும் புதுக்கவிதையாயின் 12 தொடக்கம் 16 வரிகளுக்கு உட்பட்டதாகவும் இருத்தல் வேண்டும்.
- கவிதைகள் யாவும் சொந்த ஆக்கமாக இருப்பதுடன், தெளிவாக எழுதப்பட வேண்டும்.
- கவிதை எழுதப்பட்ட தாளில் போட்டியாளர் தனது பெயரை எழுதுவது தவிர்க்கப்பட வேண்டும்.
- வயதெல்லை வரையறுக்கப்படவில்லை
- கவிதைப் போட்டியில் பங்குபற்றுபவர்கள் வலம்புரியில் வெளிவரும் கூப்பனையும் உறுதியுரையையும் நிரப்பி கவிதையுடன் இணைத்து அனுப்புதல் அவசியமாகும்.

**உங்கள் கவிதைகளை**

**கவிதைப்போட்டி-2004**

**வலம்புரி**

இல-15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு 31.01.2004ற்கும் பிந்தாமல் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.

★ பரிசுக்கான கவிதைகள் நடுவர் குழுவால் தெரிவு செய்யப்படும்.

இங்கே வெட்டி கவிதையுடன் இணைத்து அனுப்புக.

**இராசையா சோமசுந்தரம் ஞாபகார்த்த கவிதைப்போட்டி- 2004 விண்ணப்பம்**

அலுவலகப்பாவனைக்கு

முழுப்பெயர்........................

........................

தபால் முகவரி........................

........................

பிறந்த திகதி........................

தே.அ.அ. இல ........................

மாணவராயின்/பாடசாலையின் பெயரைக் குறிப்பிடவும்.

..........

திகதி

..............................

போட்டியாளர் கையொப்பம்

உறுதியுரை

இத்துடன் அனுப்பப்படுகின்ற கவிதை எனது சொந்த ஆக்கம் என்றும் வேறு எந்தக்கவிதைகளின் தழுவலும் அல்ல என்றும். இப்போட்டிக்கு ஒரு கவிதையை மட்டுமே அனுப்பிவைக்கிறேன் என்றும் இத்தால் சத்தியம் செய்கிறேன்.

..................

திகதி

..............................


போட்டியாளர்கையொப்பம்

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

# 2004 புத்தாண்டுப் பலன்

**2004ஆம் ஆண்டில் பன்னிரு ராசிகளுக்கும் ஜனவரி தொடக்கம் டிசம்பர் வரையான பன்னிரு மாத பலன்கள் தனித் தனியாகக் கணிக்கப்பட்டு இங்கு தரப்படுகிறது. பன்னிரு ராசிகளுக்குமான ஆகஸ்ட் மாதப் பலன்களின் தொடர்ச்சி.**

## மீனம்



**பூரட்டாதி 4 வது பாதம்- உத்திரட்டாதி 4 பாதங்கள்-ரேவதி 4 பாதங்கள் வரை- 9 பாதங்கள்**

மாத ஆரம்பம் கண்டச்சனியுடன்சேர்ந்த சுக்கிரன் பஞ்சமத்தில் சூரியனும் புதனும் இருக்க குடும்பத்திற்கு நாகரிகப் பொருள் சேர்க்கை, புது உடைகள் வாங்குவது போன்ற நன்மைகள் இருக்கும். போட்டி, பந்தயம், விளையாட்டு இவை ஆதாயம் மிக்கதே. உங்கள் அவசரத் தேவைகள் உடனுக்குடன் பூர்தியாகி வரும். சனிக்குப் பெயரே மந்தன் என்பதுதான். மந்தமாகச் செயல்படும் ஒரு கிரகம் நீச எல்லைக்குள் வந்தால் என்ன ஆகும். எனவே நீங்கள் நினைத்தஅளவு வேகம் இல்லையேல் என அங்கலாய்க்க வேண்டாம். அவன்தானே வேகம் பெறுகின்றான். எதிர்பார்த்த மாற்றத்தை இப்போது பெறுவீர்கள். சிலருக்கு யாதகம் நன்றாக இருப்பின் சனி பாதிப்பு இல்லாமல் பதவி உயர்வைப் பெற்று விடலாம. தனக்கு வேண்டாத மனிதர்கள் மாற்றம்அடைந்து விட்டதனால் உங்கள் விஷயதில் மற்றவர் ஈடுபாடு இருக்காது. குழந்தைவகை முன்னேற்றம் நன்றாக இருக்கும். எழுத்து மூலமாகப் பாதிப்பு ஏற்பட்டவர்களுக்கு இப்போது அதிலிருந்து விடுதலை கிடைக்கும். கணவன், மனைவி உறவு நன்றாக இருக்கிறது. கலைத்துறையினருக்கு முன்பு பாதிக்கப்பட்ட ஒப்பந்தங்கள் இப்போது புதிப்பிக்கப்படும். பண விஷயத்தில் நீங்கள் இன்னும் பின்தங்கியவர்தான். பூர்வீகச் சொத்து வகையை விற்பது அல்லது மாற்றியமைப்பதும் உண்டாகும். சிலருக்குப் பெண்கள் மூலமாக ஆதாயங்களும் இருக்கும். சுய தொழில் உள்ளவர்கள் கணக்கை சரிபார்த்து வைத்திருப்பது அவசியமாகும். நினைத்தவற்றை செயலில் கொண்டுவந்து விடுவீர்கள். பிரயாணம் ஓர் அளவு திருப்தியாக இருக்கும். குடும்பத்தில் மருந்து, மருத்துவச் செலவுகூட இடம்பெற்று இருக்கும். கணவன், மனைவி உறவில் திருப்தி இருக்கும். சிலர் அந்நியநாட்டு தொழில் தொடர்பில் அதிக அக்கறை உடையவர்களாகவும் ஈடுபாடு நிறைந்தவர்களாகவும் இருக்க வேண்டியிருக்கும். அரசியல் வட்டாரத்தினர் உங்களுக்கு சாதகமாக இருப்பதாக நினைக்க வேண்டாம். செலவும் அலைச்சலும்தான் அவர்களால் கண்ட பலன்கள். இம் மாதம் தனவரவு நினைத்தபடியே இருக்கிறது. ஆனால் செலவுகளும் அபாரம் குடும்பச் செலவுகள் குறிப்பிட்டதற்கு மேல் போய்விடும். புது உடைகள் பழைய பொருட்கள் சோக்கையும் இருக்கிறது. குடும்பத்தில் தடைப்பட்டிருந்த காரியங்களுக்கு மதிப்பு இப்போது அதிகமாகும். பண விரயத்தைப்பற்றி இல்லை. புதிய சாதனை தான் பெரியது. பூமிப் பொருள்மீது பணம் கொடுப்பதும் உறவினர் நோய்வாய்ப் பட்டிருந்தவர்களுக்கு உபகாரம் செய்வது உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி தந்தது. நிறைவு இருக்கிறது. புதுமனைப் பெண்களுக்கு இன்ப விருத்தி அளிக்கும் காலம் அல்லவா. உறவினர் வருகையில் மிகவும் நெருங்கிய சூழ்நிலை இருந்து வருகிறது. பழைய விஷயங்கள் அப்படியே இருக்கின்றன. தூரத்துக் கடிதம் நின்றிருந்த காரியங்கள் துரிதமாக்கும். போட்டி, பந்தயம், விளையாட்டு இந்த வகையில் முற்போக்கான சூழ்நிலை இருக்கும்.

**பன்னிரு ராசிகளுக்குமான செப்ரெம்பர் மாதப்பலன்**

## மேடம்



**அச்சுவினி 4 பாதங்கள்-பரணி 4 பாதங்கள். கார்த்திகை முதல் பாதம் வரை-9 பாதங்கள்.**

உங்கள் கௌரவ இல்லத்தில் சூரியன் ஆட்சி செவ்வாயும் புதனும் கூடவே இருக்கின்றனர். சுக இல்லத்தில் சுக்கிரன் வெளி இடத்து சுகம்கிட்டும். குரு மறைந்ததை கவனத்தில் வைத்து செயல்படவும். திருமணமே இதரவகை விருந்தாக இருந்தாலும் உரிய காலத்தில் போக மாட்டீர்கள். இது ஒரு குறையாக இருக்கும். குடும்பத்தில் கணவனோ, மனைவியோ ஆரோக்கியப் பாதிப்பை அடைந்து மருத்துவச் செலவுகளையும் உண்டாக்கும். என்றாலும் செய்தொழில் கவனம் மிக்கவர்களாக செயல்படுவீ. திருமணம், காதல் கடிதங்கள் எழுத இத் ஏற்ற மாதமே எப்போதோ பேசி வைத்த விஷயங்கள் இப்போது உருவகத்திற்கு வந்து விடும். இதனால் நீங்கள் கேளிக்கை விருந்து வகைக்கு செலவழிக்கக் கூடியவர்களாக இருக்கிறீர்கள். இப்போது நல்ல நண்பர்கள் சிலரையும் பெறுவீர்கள். ஏதேதோ நினைத்து மனதுக்குள் மத்தாப்புத்தான் எதிலும் மகிழ்ச்சியான சூழ்நிலையே இருக்கும். உத்தியோகப்பிரிவு ஆண், பெண்களுக்கு இம்மாதம் சற்றுக் கவர்ச்சி மிகுந்ததாகக் காணப்படுகிறது. உற்சாகக் கடிதம் வருதல் உவகை தரும நட்புவகையினரைச் சந்திப்பது சிறு சிறு அரசியல் வாதிகளுக்கு முன்பு பாதிக்கப்பட்ட பயம் இருக்கும். உங்களிடம் வழக்கத்திற்கு மாறான செயல்களைக்காண முடிகிறது. இப்போது உங்கள் நண்பரும், உறவினரும் கூடிவந்து ஊழியம் செய்வர். சில வகையில் உங்கள் அணுகு முறை மற்றவர்களால் பாராட்டப்படும் கணவன், மனைவி இடையே நல்ல கருத்துக்கள் உதயமாகும். பெருமைக்குரிய பெரிய திட்டங்களை உருவாக்குவீர்கள். எதிர்பார்த்த பணம் உரிய காலத்தே வந்துவிட்டதால் திட்டங்களுக்கும் வெற்றி நிச்சயம் என்ற நிலை உருவாகிவிட்டது. சகோதர, சகோதரி வகைக்கு உபகாரம் செய்வது இருக்கும். எதிரியாக இருந்த சிலருக்கு இப்போது எதிரில் வந்து உதவி புரிவர். தூரத்துக் கடிதம் தொழில் வகைக்கு அனுகூலமாக வந்து சேரும். சிலருக்கு அயல்நாட்டு வணிக ஒப்பந்தமும் செய்ய வாய்ப்புகள் உருவாகும். குடும்ப வகைக்கு நாகரிகப் பொருள் சேர்க்கையும் உண்டாகும். உறவினர் போக்குவரவு குடும்பத்தில் அதிகமான செலவுகளை ஏற்க வேண்டி இருக்கும். இது இப்போதைக்கு அவசியமாகவும் இருக்கும். காரணம் குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் கூடி வருவதால் என்பதுதான். மேலும் உங்கள் கவனமீ இப்போது தொழில் வழியில் லயித்து இருக்கும். மற்ற வகையில் கவனம் செலுத்த மாட்டீர்கள். குடும்பத்தில் தாய்வழி மருத்துவச் செலவுகள் இடம்பெறும் என்பது குறிப்பிடத்தக்கது. இப்போது கணவனோ மனைவியோ யாராக இருந்தாலும் கண்களைப் பாதிக்கும் என்பதால் இந்த மாதம் முழுவதும் கூடுமான வரையில் முன் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். குழந்தைகள் வகைக்கு உஷ்ண கட்டி போன்றவை உடலில் தோன்றி மருத்துவ சிகிச்சை அவசியமாகும். இப்போது மத்திமப் பகுதிக்கு மேல் தொழில் வழியில் அலைச்சல் இருக்கும். மேலும் அகால உறக்கம், அகால உணவு கொள்வதும் இருக்கும். இது வகையான உடல்நல பாதிப்பு உண்டாகலாம்.

# உங்களுக்கு எப்படி?


## இடபம்



**கார்த்திகை 2,3,4ம் பாதங்கள்-ரோகிணி 4 பாதங்கள்-மிருகசீரிடம் 1,2 பாதங்கள் வரை-9 பாதங்கள்**

இப்போது பாதத்துச் சனி உங்களை பயமுறுத்தினாலும் பஞ்சமத்துக்குரு உங்களுக்கு பல வழிகளில் துணை இருப்பவன் நான்காம் இடத்து சூரியனுடன் புதனும் செவ்வாயும் கூடியது. தொழில் வழி அவ்வளவு சிறப்பாக இல்லை. சனிபையப்பற்றிக் கவலைப்பட ஒன்றும் இல்லை. ஆனால் சாரம் நன்றாக இல்லை. சில சமயம் அலைச்சல்பட்டுத்தான் காரிய சாதனை புரிய வேண்டியிருக்கும். தொழில் இடமாற்றம் தூரத்துச் செய்தி அவ்வளவு திருப்தியாக இல்லை. அரசியல், அரசாங்க சம்பந்தமாக மனிதர்களின் சந்திப்பு எழுத்துவகை உத்தரவுக்கு உதவியாக இருக்கும் போட்டி, பந்தயம், விளையாட்டு போன்ற வழிகள் அறைபலி தம் உடையதாகும். கணவன், மனைவி குழந்தைகள் மருத்துவச்செலவு உங்களை விடாது. வெற்றிமேல் வெற்றி இருக்கிறது. பதவி மாற்றம் இடமாறுதலும் குறிப்பிடத்தக்கது. தனம் கொடுக்கல் வாங்கலில் தன்நிறைவு இருக்கிறது புது உடைகள் பொருட்கள் சேர்க்கையும் செலவும் இருக்கிறது. புத்திரர், புத்திரிமார்கள் நிலையில் பெருத்த முன்னேற்றத்தைக் காணும் காலம். சுப விஷயம் குறித்து கடிதங்களும் வாழ்த்துக்களும் வரும். பிரயாணம் குடும்பத்துடன் ஏற்படி தவிர்க்க முடியவில்லை. தொழில் முன்னேற்றம் குடும்ப தேவைகளை பூர்த்தி செய்வது உண்டாகும். பழைய நண்பர்கள் சிலர் உங்களை புதிய முயற்சிக்கு ஊக்கமளிப்பவர்களாக இருப்பர். பெண்கள் குழந்தைகளுக்கு புது உடைகள் சேர்க்கை நாகரிகப் பொருட்கள் குடும்பத்துக்கு சேர்க்கையும் நடுப்பகுதிக்கு மேல் வந்து சேரும். உத்தியோகப்பிரிவு ஆண், பெண்களுக்கு உயர் அதிகாரிகளால் குறை கூறப்படுதல் மனச் சலனமான போக்கும் இருந்து படிப்படியாக குறைந்துவரும் கலைப் பிரிவு ஆண், பெண்களுக்கு வேகம்மிக்க வேலைகள் மிகுந்து விட்டன. மங்கி இருந்த சூழ்நிலை மறைந்து விட்ட படியினால் புதிய கருத்து உதயமாகுதல். நினைத்தபடி தனவரவும், தொழில்வகை நம்பிக்கையை அதிகமாக்கும். வாகனம் வாங்குவது அல்லது மாற்றிஅமைப்பதும் குறிப்பிடத்தக்க அம்சமாகும். கடன் வழக்கு வகை பாதிக்க முடியாதநேரம் இது. எழுத்து ஒப்பந்தம் போன்ற சிறு சிறு நன்மைகளும் இருக்கத்தான் செய்யும். நடுப்பகுதிக்கு மேல் உங்கள் குடும்பம் கல கலப்பாக இருக்கும். தம்பதிகளுக்கு அன்யோன்னியம் மிகுந்து காணப்படும். மனைவியின் உடல் ஆரோக்கியம் சுமார். புத்திர், புத்திரிகளால சற்றுக் கவலை ஏற்படும் மாணவ, மாணவியருக்குச் சாதாரண காலம்தான் சொன்ன சொல்லைக் காப்பாற்றி எல்லோருடைய நன்மதிப்பையும் பெறுவீர்கள். காசு கொடுத்து ஆகவேண்டிய காரியங்களை பேசுசு புத்தி சாதுரியத்தினால் முடித்து நல்ல பெயரைப் பெறுவீர்கள். விருந்தினர்கள் வருகை உங்களுக்கு மனம் பெரிய வெற்றியைத் தேடித்தர போகிறார் என்பதில் சிறிதும் சந்தேகம் இல்லை. நினைத்த காரியங்கள் நினைத்தபடி முடியும். தூர விலகிச் சென்றவர்களும் ஒட்டி உறவாடி வருவார்கள். பெரிய மனிதர்களின் தொடர்பும் அவர்களின் மூலம் உதவியும் கிடைக்கும். மேலும் சிலருக்கு காதல், கல்யாணப் பிரச்சினைகள் கூடிவந்து தடைப்படுவதால் மனச் சலனம் இருக்கும். இது குடும்ப வகையிலும் கசப்பான சூழ்நிலைக்கும் காரணமாக இருக்கும்.

## மிதுனம்



**மிருகசீரிடம் 3,4வது பாதங்கள் - திருவாதிரை 4 பாதங்கள் - புனர்பூசம் 1,2,3 பாதங்கள் வரை 9-பாதங்கள்**

இக்காலம் ஜன்மத்துச் சனியின் வேகத்தைக் குறைக்க சுக இல்லத்து, குருவோடு சேர்ந்த கிரகங்கள் புதன், சூரியனும் திட்டமிட்டுசெல்ல வேண்டும். எதிலும் திட்டமிட்ட செயல்தான் சிறப்பானது. உங்கள் புதிய முயற்சிகள் ஓரளவு திருப்தியாக உருவாகிறது. நண்பர்கள் வகையில் முக்கிய ஆலோசனைகளைப் பெறுவதும் அவசியம். சனி உங்கள் யோக கிரகமாக இருந்த போதிலும் பகைவன் சாரம் பெற்றது நல்லது அல்ல. மேலும் கணவன், மனைவி உறவு திருப்தியாகவே இருக்கும். சகோதர, சகோதரி வகையில் மட்டும் இடையிடையே கருத்து மோதல் இருக்கும். பெண்கள் தேக ஆரோக்கியத்தைக் கவனிக்க வேண்டும். தொழில் சம்பந்தமான ரகசியங்களைக் காப்பாற்ற வேண்டும். அயல் நாட்டுக் கடிதத்தொடர்பு திருப்தியாகவே இருக்கிறது. கடன்வகை உங்கள் கவனத்தை கவருவதாகத்தான் இருக்கிறது. வழக்கு சிலருக்கு வேக முடையதுதான் என்றாலும் கஷ்டமில்லாமல் காரிய சாதனைகள் இருப்பதை உணருவீ புண்ணியஸ்தல பிரயாணமும் மகிழ்ச்சியும் உண்டு. கணவன் மனைவி உறவு கண்ணியமுடையதாக இருக்கும். தேக ஆரோக்கியம் மட்டும் சீதளத்தால் பாதித்திக் குணமாகும். பெண்களுக்கு கருப்பைக் கோளாறு போன்றவை உண்டாகி மருத்துவச் செலவும் இடம்பெறும். சனி காலில் சிறு காயத்தையும் உண்டாக்கும். சகோதரன் அல்லது சகோதரி வகையில் செலவுகளும் இடம்பெறும். உடல் நலத்தில் அக்கறை காட்ட வேண்டும். செய்தொழில வகையில் உழைப்புக்குப் தக்கபலன் கிட்டுவது கடினம். வியாபாரிகள் இதை உத்தேசித்து மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். வண்டி, வாகனம் வைத்து தொழில் நடத்துகிறவர்கள் விபத்தால் நட்டம் அடையக் கூடியவர்கள் தொழில்த் துறையிலும் நீங்கள் மற்றவரை துரிதப்படுத்துவது அவசியம் அவசரமும் கூட. சிலருக்கு சீதள பாதிப்பு விட்டு விட்டு இருக்கும். தொழில் கலைப்பிரிவினர் எழுத்தாளர் போன்றவர்களுக்கும் அடுத்தடுத்து முயற்சியில் வெற்றியைக் கொடுக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. 9ல் சனி என்பதை மனதில் கொண்டு பயப்படுவதிலும் பயன் இல்லை. சனி தன் குட்டி வீட்டில் தான் இருக்கிறான் என்பதை மறக்கக் கூடாது. எனவே எப்படிப் பார்த்தாலும் படிப்படியான மேன்மை இருக்கத்தான் செய்யும். குருவை கவனிக்க வேண்டும். சிலருக்கு திடீர் என அயல்நாட்டுப் பிரயாணம் உண்டாவதும் குறிப்பிடத்தக்கது. கலைபபிரிவு ஆண், பெண்களுக்கு தொழில் வகையில் வரவேண்டிய பணம் சற்று தாமதமானாலும் தொழில் வேகம் உள்ள காலம் இது. தூரத்துப் பிரயாணம் கட்டாயமாக இருக்கலாம். பகைப்பட்ட மனிதர்கள் மீண்டும் உங்களை நாடி வருவர். பழைய தொழில் சம்பந்தப்பட்ட அதிபர்களும் உங்களை சந்திக்கவேண்டிய அவசியம் அவசரம் புதனும் சுக்கிரனும் இதை உண்டாக்கி விடுவர்.

## கடகம்



**புனர்பூசம் 4வது பாதம் - பூசம் 4 பாதங்கள் - ஆயிலியம் 4 பாதங்கள் வரை - 9 பாதங்கள்**

குடும்ப விஷயங்களில் குறுக்கிட்ட இடையூறுகள் அகன்றுவிட்டன. சுக்கிரன் இனிமையான எண்ணங்களை உண்டாக்குபவன். செவ்வாய் சாரத்தால் செலவுகள் ஓரளவு குறையும். அஜீரணம் போன்றவை தலைதூக்கிவிடும். போட்டி, பந்தயங்களில் ஈடுபாட்டினைக் குறைத்துக்கொள்வது நல்லது. மாணவ மாணவியர்களுக்கு சாதாரண காலமாகும். பண வரவு இருக்கிறது. பழைய பேச்சுக்களைப் பேசுவதால் பாதிப்பும் ஆகாத காரியங்களுக்கு அலைந்து பிறரால் அவச்சொல்லும் உண்டாக்கும். சத்துருக்கள் விஷயத்தில் நீங்கள் சில வ்கையில் தாழ்ந்து போவது நல்லது. திட்டமிட்ட காரியங்கள் தவறிவிட்டபடியால் உடன் இருப்பவர்கள் உங்களுக்குப் பாதகமான சூழ்நிலையை உருவாக்குவர். இதனால் வெளியூர்ப் பிரயாணம் ஏற்பட்டாலும் வெட்டிச் செலவில்தான் முடியும். பழைய நண்பரைச் சந்திப்பதும் பாதக விளைவை உண்டாக்கும். தேக ஆரோக்கியம் எளிதாக கையாளப்படும். எழுத்து ஒப்பந்தங்கள் உங்களுக்கு அனுகூலமாக இருக்கின்றன. பழைய நண்பர்கள் விலகி இருந்தவர்கள் இப்போது உங்களை நெருங்கி வருகிறார். பூமி, வீடு வகையில் சிக்கல் இருந்தது. இப்போதைக்கு ஒரு வழியில் தீர்த்துக் கொள்ளலாம். குழந்தைகள் தேக ஆரோக்கியம் கவனிக்கப்படவேண்டும். சீதள நோய் உண்டாகும். குடும்பத்தில் கணவன், மனைவி வகைக்கு மருத்துவச் செலவுகள் கடுமையாக இருக்கும். அரசியல் வட்டாரத்தினர் சிலர் இப்போது நெருங்கிய தொடர்பு உடையவராக இருப்பர். உங்கள் புதிய தொழிலில் அவர்களுக்கும் பங்கு உடையவர்களாக இருப்பர். அரசாங்க மூலமாக எழுத்துவகை உத்தரவும் அனுகூலமாக வந்து சேரும். சிலர் போட்டி, பந்தயம், விளையாட்டு போன்ற வழியில் ஈடுபட்டு பாராட்டுகளை பெறக்கூடியவர்களே விலகி இருந்த நட்பு மீண்டும் கூடும். இக்கால நடுப்பகுதிக்கு மேல் நீங்கள் தொழில் குடும்பம் இந்த வகையில் வேகம் பெற அரம்பித்து விட்டபடியால் விலகி இருந்த உறவும் ஒன்றுசேரும். குடும்பத்துடன் புண்ணியஸ்தல பிரயாணத்தை மேற்கொள்வதும் இருக்கும். கார், ஆட்டோ போன்ற வாகன தொழில் செய்பவர்களுக்கு பழுது செலவுகள் அதிகமாக இருக்கும். இதனால் கடன் பெருகவும் வாய்ப்பு உள்ளது. குழந்தைகள் வகையில் அதிக செலவுகளையும் ஏற்கவேண்டியிருக்கும். நல்ல ஆகார சோக்கை விருந்து ஆரோக்கியச் செலவும் ஏற்கவேண்டியிருக்கும். உடல் ஆரோக்கியப் பாதிப்பையும் தான் செய்வான். உறவினர் இல்லங்களில் நடைபெறும் கருமச் செலவு முக்கியமாக இருக்கும். கடைசியில் மனதை ஒருநிலைப்படுத்த முடியாது. தூக்கம் குறைந்த காலம். தொழில் வழியில் முட்டுக்கட்டை தொடர்ந்து இருக்கின்றன. சத்துருக்கள் வழக்கு இதற்கு பயப்படவேண்டியதில்லை. சற்று மந்தமான நிலை அவ்வளவுதான். பெண்கள் ஆரோக்கியம் தான் கவனிக்கப்படவேண்டியது. கணவன், மனைவி இடையில் ஏற்பட்ட பூசல் மறைந்து விட்டன. எழுத்து ஒப்பந்தம் போன்ற வழிகளில் பிரகாசமான போக்குத் தொடர்ந்து இருக்கும். தூரத்துக் கடிதங்கள் செய்தொழில் வழிக்கு சிறப்பான அம்சத்தை உண்டாக்கும்.

(தொடரும்)

சோதிடமேதை ராமன்

# சித்தர்கள் காட்டிய மருத்துவம்

# புத்துயிர் பெறுவது எப்போது?

தாயுமானவர் "சித்தர்கணம்" என்ற தலைப்பில் பாடல்கள் பாடியுள்ளார். "வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை பெற்ற வித்தகர்" என்று பாராட்டுகிறார். "திக்குகளின் அந்தம் வரை, மனோவேகத்தில் போய்வருவீர். துருவமண்டல மத்தியில் நிற்பீர். ஏழு கடலையும் உள்ளங்கையில் வைத்து ஆசமனம் செய்வீர். தேவர் உலகையும் ஐராவதம் என்ற வெள்ளையானையையும் பந்துபோல் எறிந்து விளையாடுவீர். கடுகுக்குள் அண்டத்தின் எல்லையிலுள்ள எட்டு மலைகளையும் புகுத்துவீர். உங்கள் எண்ணரிய சித்துகளை எடுத்துக் கூறமுடியுமோ?" என்று வியப்புடன் விபரிக்கிறார். பௌதீக விஞ்ஞானமே உயர்ந்தது என்று பேசும் இக்காலத்தவருக்கு இது வெறும் புழுகுக்கதையாய்த் தோன்றும்.

கமில்ஸ்வெலபில் என்பவர் போலந்து நாட்டவர். வடமொழியும் இந்திய இயலும் கற்று, இந்தியாவில் பலகாலம் வாழ்ந்தவர். அவர் 1973 இல் லண்டனில் "சித்திகள் மிக்க புலவர்" என்ற ஆங்கில நூலில் சித்தர் பாடல்கள், சித்த மருத்துவம் ஆகியவைபற்றிய கருத்துகளை வெளியிட்டார். முகவுரையில் பாம்பாட்டிச்சித்தரின் பாடல் ஒன்றை எடுத்துக்காட்டுகிறார், (பதினெண் சித்தர்கள் ஞானக்கோவை) "எட்டுநாகம் தன்னைக் கையால் எடுத்து ஆட்டுவோம். இந்திரனார் உலகத்தை இங்கே காட்டுவோம். கட்டுக்கு உலகத்தை இங்கே காட்டுவோம். கட்டுக்கு அடங்காத பாம்பைக் கட்டிவிடுவோம். தூணைத் துரும்பு ஆக்கு வோம்; துரும்பைப் பெரிய தூணாக்குவோம். ஆண்மகனைப் பெண்ணாக்குவோம். பெண்ணை ஆணாக்குவோம். எட்டுமலையைப் பந்தாய் எறிவோம். ஏழுகடலைக் குடித்து ஏப்பம் இடுவோம். வானத்தை வில்லாக வளைப்போம். நொருப்பில் மூழ்குவோம்; கடலுள் இருந்து மூச்சுவிடாமல் வாழ்வோம். காட்டு விலங்குகளைக் கால் அடிக்குள் நின்று ஏவல் செய்ய வைப்போம். பொன்னை ஆக்குவோம்"

இவை பைத்தியம் பிடித்தவனின் சுய தம்பட்டமா? அல்லது சித்தர் தம் கூட்டத்தினர் இப்படிப்பட்ட இயற்கைக்கு மாறான, விசித்திரமான திறமைகளை உண்மையில் கொண்டுள்ளனரா? அல்லது இப்படி மறைபொருளை மர்ம மொழியில் மறைத்துப் பேசுகிறார்களா? இவர்களது அதிசயக் கதைகளை நம்பலாமா? மேலை நாட்டில், பகுத்தறிவுவாத நூற்றாண்டில் பிறந்தவருக்கு இப்படியான சந்தேகங்கள் தோன்றுவது இயல்புதானே!

### சித்த மருத்துவத்தின் சக்திகள்

ஸ்வெலபில் 1968ல் சித்த மரபு இன்னும் அழியாமல் செழித்திருப்பதை அனுபவத்தில் கண்டார். யாக்கோபு சித்தர் மரபில் வந்த ஒருவரின் அறிமுகம் இவருக்குக் கிடைத்தது. பழனியில் முருக வழிபாடு செய்யும் சித்தவைத்தியராய், சென்னையிலும் நோய் தீர்க்கும் பணியை மேற்கொண்டவரின் அபூர்வமான சக்திகளை (சித்திகளை) நேரில் பார்த்தார். அவரது வைத்தியம் ஸ்வெலபிலின் மேனாட்டு மருத்துவர்களாலும் தீர்க்க முடியாத வயிறு - குடல் சமிபாட்டு வியாதி ஒன்றை முற்றாகத் தீர்த்துவிட்டது. அவரது உடல் பூரண நிலைக்கு மீண்டது. அதனால் சித்த மருத்துவத்தின் அடிப்படைகளை நோக்கினார். தமது நூலில் அதன் சுருக்கத்தை தருகிறார்;

தெய்வீகத்தன்மையை இந்த உடலுடன் உயிர் வாழும் போதே அடையலாம். ஊத்தைச்சடலம் என்று உதறித்தள்ளும் வறட்டுத் துறவைவிட்டு மரணத்தையும் வினைக்கட்டையும் வெல்லுவதற்கு அதனை ஒரு சக்திவாய்ந்த கருவி ஆக்கவேண்டும். இந்த உடல் அழியும் முன்பே வீடுபேறு (சீவன் முக்தி) பெறமுடியும்; ஆகவே உடலைப் பேணவேணடும்; பூரண நிலையிலே அதைவைத்திருந்தால் தான் தியானம், யோகம் மூலமாக விடுதலை பெறலாம். இங்கு ஆசிரியர்,

"உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெயஞ் ஞானம் சேரவும் மாட்டார்.
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே"

என்ற திருமந்திரப் பாடலையே மனத்தில் வைத்து எழுதுகிறார். செய்யுள் 307 உடன் 724 ஐயும் எடுத்துக்காட்டுகிறார். பிற்கால சித்தர்களின் பாடல்களில் மீண்டும் உடலின் இழிவு, பெண்ணாசைப் பழிப்பு காணப்படுகிறது. உடலுக்கு அப்பால் வாழ்க்கையே இல்லை என மயங்கியவர்களுக்கு உயிர் உண்டு. அது உயர் அறிவு பெறவேண்டும் என்று வற்புறுத்தவே அவர்கள் அதனைக் கூற வேண்டியதாயிற்று.உலோகாயதம் முற்றி பொன்னும் பொருளும் தேடி அலைந்த மக்களுக்கு அவற்றின் நிலையாமையை உணர்த்தவே, இப்படி வாழ்வை எதிர் மறையாக நோக்கும் போக்கு வளர்க்கப்பட்டது போலும்.

## மருத்துவ விளக்கம்

### ஆன்மீக விருத்தி

ஆன்மீக அபிவிருத்தி மிக மெல்ல நிகழ்வது; உடல் வளர்ச்சியோ வேகமாக நிகழ்வது. முதுமையும் விரைவில் வந்து விடும். ஆகவே, உடல் முற்றிப் பழுக்க விடாது, அதனை வச்சிரதேகம் ஆக்கவேண்டும். உடல், உள (ஞான) வளர்ச்சிகள் ஒருமித்துச் செல்லவேண்டும். காலம் என்பதைத் தன்கட்டுக்குள் வைத்து விடமுடியும் என்று சித்தர்கள் சவால் விடுக்கிறார்கள். காலங் கடந்த மெய்ப்பொருளை உபாசித்து, மூச்சை ஒழுங்குபடுத்தி 400 ஆண்டுகள் வாழ்வது இலகுவான காரியம் என்கிறார்கள். 55 வயது தான் மனிதனது வாழ்க்கையின் உச்சி. வயது முதிர முதிர இளமையாகலாம். (இயற்கைக்கு மாறான வாழ்வும் பழக்க வழக்கங்களும் முற்றி, மனிதன் நோயாளியாகி, 55 வயதில் ஓய்வுபெற வற்புறுத்தும் அரசாங்க கெடுபிடிகளால் வீட்டில் சும்மா இருந்து, வாடி வதங்கிய மரம்போல இறப்புக்கு ஆயத்தமாகிறான். "அழகாக, முதுமையடைவது எப்படி" என்று போதிக்கும் நிலையும் வந்து விட்டது.

உரோம ரிஷி என்ற சித்தர் "பிராணன் போய்விட்ட நிலைமரணம்" என்கிறார். பிராணனைக் கட்டுப்படுத்துவதால் நீண்ட காலம், உடல் நலத்தோடு வாழலாம். சாகா நிலையும் எய்தலாம் என்கிறார். "உரோம ரிஷி ஞானம்" என்ற பகுதியில் 13ம், நூறு வயதுள்ள மனிதன் நாள் ஒன்றுக்கு 21,600 முறை மூச்சுவிடுகிறான். அதாவது மணிக்கு 900 மூச்சு; நிமிடத்துக்கு 15 முறை (மேனாட்டு விஞ்ஞானிகள் 18 என்பர்) மூச்சைக் குறைத்து நிமிடத்துக்கு 2 ஆக்கினால் 100 x 15÷2= 750 ஆண்டுகள் வாழலாம். கூட்டி நிமிடத்துக்கு 18 ஆக்கினால் சுமார் 83 1/3 ஆண்டு மட்டுமே வாழலாம். சொரூப சமாதியில் லயித்திருக்கும் யோகி மூச்சுவிடாமல் இருப்பதால், காலம் கடந்து வாழ்வான். பிராணாயாமம், வீண் பேச்சில் மூச்சை விரயமாக்கு தலைத் தவிர்த்தல், பெருமூச்சு, அவசர மூச்சு (இளைப்பு) ஆகிய வற்றை இயன்ற அளவு விலக்குதல் - இவை எல்லாம் நீண்ட ஆயுள் அளிக்கவல்லவை. "மூச்சைக்கட்டுப்படுத்துபவன் தான், ஆயுளையே கட்டுப்படுத்துகிறான். தாது வர்க்க மருந்துகளையே விசேடமாகச் சித்தவைத்தியர் கொடுக்கிறார்கள். அத்துடன் இலகுவான பிராணாயாம முறைகளைத் தம்மிடம் வரும் நோயாளிகளுக்கு வற்புறுத்துகிறார்கள். கோபம், வெறுப்பு, அந்தரம் (**Anxiety**) முதலிய மனக் கிளர்ச்சிகளின் போது, மூச்சை ஆறுதலாக இழுத்துவிடுவதால் நரம்புகள் சாந்தம் அடைகின்றன. அத்துடன் எளிய ஆசனங்களையும் செய்து வந்தால், உடலும் உளமும் அமைதியுற்று சுகதேகியாய் வாழலாம். (இப்போது மேனாட்டு மருத்துவர்களும் இவற்றைச் சிபார்சு செய்கிறார்கள்.)

இன்றைய காலகட்டத்தில் இலங்கையிலுள்ள வைத்தியர்கள் கொழும்பிலிருந்தும், சமீபகாலத்தில் மேனாட்டு முறைப்படி தயாரித்த ஆயுர்வேத மருந்துகளையும் நோயாளிகளுக்குச் சிபார்சு செய்கிறார்கள். "மருத்துவ பிரதிநிதிகள் (**Medical Representatives**) என்ற வர்க்கம் சுதேச மருத்துவர்களிடமும் வந்து "மாதிரி" டப்பாக்கள், கிறீம்கள், கப்சியூல்களை இலவசமாகக் கொடுத்துப் பிரசாரம் செய்கிறது. நம்மத்திய வகுப்பார் இது காலம் மிச்சமாகும் வசதியான முறை என்று விரும்பி வரவேற்கிறார்கள். இன்று தாங்களே மருந்து அரைப்பது, எண்ணெய் காய்ச்சுவது, செந்தூரம் புடம் வைப்பது என்று எத்தனை வைத்தியர்கள் நேரம் ஒதுக்குகிறார்கள்? சுலபமாகப் பணம் தேடுவது மட்டும் தான் ஒரே நோக்கம். அரசாங்கமும் நாவின்னைத் தொழிற்சாலைக்கு இலாபம் காட்டக் கூடிய ஆயுர்வேத சிகிச்சை முறையையே நாடு முழுவதும் வலியுறுத்துகிறது. அரசாங்க உத்தியோகத்துக்கு ஆசைப்படும் நம் பட்டதாரிகள் தம் சொந்த முயற்சிக்கே இடம் இல்லாமல் இயந்திர வாழ்க்கை வாழுகிறார்கள். சுயநலம் மிக்க பொது மக்களோ செம்மறிகள் போலச் செல்வார் பின் செல்கிறார்கள். இலவசமருந்து எங்கே கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறார்கள். சிரமப் பட்டு மருந்து செய்யும் வைத்தியனைப் பாராமரிக்க, அவனது மருத்துவ அறிவை முழுதாகப் பயன்படுத்திப் புதிய புதிய மருந்துகளைச் செய்யக் கூடிய பொருளுதவியைச் செய்யத் தயங்குகிறார்கள். ஆயுர்வேத மருந்தியலும் கல்கத்தாவில் இருந்து அமெரிக்க கூட்டு வாணிப முறையில் இங்கு வருகிறது. சென்னையில் செய்யும் சித்தவைத்திய செந்தூரங்கள், பஸ்பங்கள் இங்கு பெற வழியே இல்லை. போய்வருவோரிடம் சொல்லிவிட்டே அவற்றுக்கு மும்மடங்கு விலை கொடுத்துப் பெறவேண்டியிருக்கிறது. அரச அதிகாரத்தில் உள்ளவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மந்திரிமாரிடம் வற்புறுத்தினால் அல்லவோ ஏதும் நன்மைகிடைக்கும்?

ந. நடராஜலிங்கம்
ஆயுள் வேதவைத்தியர்
அல்வாய்

---

# நீதி நூல்களை சரிவர கற்காமையே இன்றைய அவல வாழ்விற்குக் காரணம்

### சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் எடுத்துரைப்பு

(யாழ்ப்பாணம்)

மனித வாழ்வை மேன்மைப் படுத்தும் நீதி நூல்களான ஆத்திசூடி, கொன்றை வேந்தன் போன்றவற்றை சிறந்த முறையில் கற்கக் கூடிய வாய்ப்புகள் பாடசாலையிலும் சரி வீட்டிலும் சரி தற்போது இல்லை. இது ஒரு துர்ப்பாக்கிய நிலையாகும். இன்று இளைஞர்கள் மத்தியில் நிலவும் கலாசாரச் சீரழிவு, நெறி பிறழ்ந்த வாழ்க்கை இவற்றுக்கெல்லாம் காரணம் நீதி நூல்களை இளவயதில் சரிவரக் கற்காமையே ஆகும்.

தொண்டைமானாறு செல்வச் சந்நிதியான் ஆச்சிரமத்தில் அண்மையில் அமரர் பண்டிதர் கதிரித்தம்பி தியாகராசா கதிரித்தம்பி நினைவாக இடம்பெற்ற "அறநெறி வழிகாட்டும் அறிவுச் செல்வங்கள்" நூல் வெளியீட்டு விழாவில் நூல் நயப்புரை நிகழ்த்திய இந்து சமய விவகார அமைச்சின் உதவிப் பணிப்பாளர் சிவத்தமிழ்வித்தகர் சிவமகாலிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நீர்வேலி செல்வக் கதிர்காம பிரதமகுரு சிவஸ்ரீ தியாகராசாக் குருக்களின் (நீர்வைமணி) ஆசியுரையை தொடர்ந்து இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

நமது அறிவுச் செல்வங்களான புராணங்கள், இதிகாசங்கள் மற்றும் அறக் கருத்துக்களை உணர்த்தும் சிறந்த நூல்களை வாசிப்பதில் இன்றைய இளம் சமூகத்தினர் அக்கறை காட்டுவதில்லை. மாறாக கண்ட கண்ட தரங்குறைந்த நூல்களை வாசிப்பதில் ஆர்வம் காட்டுவது கல்வியியலாளர் மத்தியில் பெரும் கவலை தரும் விடயமாக உள்ளது.

இன்று தமிழர் வாழும் நிலம் துன்பமும் துயரமும் நிறைந்தமயான பூமியாக விளங்குவதற்கு நம்முடைய மாறான சிந்தனைகளே பெரிதும் காரணமாக உள்ளன.

பொது நலமனப்பான்மை, உண்மை, நேர்மை என்பன நம் மத்தியில் ஆருகிவருவது பெரிதும் கவலைக் குரியதாகும்.

நமது சிறார்களின் மத்தியில் நல்ல அறக் கருத்துக்கள் வலியுறுத்தப்படவேண்டியது அவசியமாகும். "இளமையில் கல்வி சிலையில் எழுத்து" என்னும் வாக்கிற்கு ஒப்ப நல்ல கருத்துக்கள் சிறார்களின் உள்ளத்தில் பதிந்து அவை செயலுருப் பெற்று சமூக மேம்பாட்டிற்கு வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை என்றார்.

புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தாக் கல்லூரி ஆசிரியர் லலீசன் உட்பட பலர் அங்கு உரைநிகழ்த்தினர். நீர்வேலி ஸ்ரீ கணேசா அறநெறிப் பாடசாலை மாணவரின் பண்ணிசை, இசையும் அசைவும் நாட்டிய நிகழ்வு, நி.மயூரகிரி சர்மாவின் சொற்பொழிவு உட்பட பயன்மிகு நிகழ்வுகள் பலவும் செல்வி மகிந்திஸியின் நெறிப்படுத்தலில் இடம்பெற்றன.

---

# பன்னிப்பிட்டியவில் உள்ள அந்தோனியார் தேவாலயம் தாக்குதலுக்கு இலக்கானது

(கொழும்பு)

கொழும்பு பன்னிப்பிட்டியவில் உள்ள புனித அந்தோனியர் தேவாலயம் இனந்தெரியாதோரால் சேதமாக்கப்பட்டுள்ளது.

இனந்தெரியாத கும்பல் ஒன்று பயங்கர ஆயுதங்கள் சகிதம் மேற்படி ஆலயத்துள் புகுந்து நடத்தியு தாக்குதல்களிலேயே இது சேதமாக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற இத்தாக்குதல் சம்பவத்தில் ஆலயத்துள் காணப்பட்ட பல இலட்சக் கணக்கான ரூபா பெறுமதியான பொருட்கள் சேதப்படுத்தப்பட்டுள்ளதுடன், ஆலயத்தை ரயர்கள் இட்டு தீயிடும் முயற்சிகளும் இடம் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு கிறிஸ்தவ ஆலயங்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்களைக் கட்டுப்படுத்தும் விதத்தில் பொலிஸாரால் திருப்திகரமான நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டவில்லை. இது அரசாங்கத்தின் செயற்பாடுகள் மீது தமக்கு நம்பிக்கையீனத்தை உருவாக்கியிருப்பதாகக் கிறிஸ்தவ அமைப்புகள் கண்டனம் தெரிவிக்கின்றன.

இவ்வாறான செயற்பாடுகளுக்குப் பின்னால் பலமான இனவாத அரசியல் கட்சிகள் இருப்பதாகவும் அவ் அமைப்புக்கள் சுட்டிக்காட்டி தமது ஆட்சேபத்தை வெளியிட்டுள்ளன.

இதேவேளை இம் மாதத்தில் தேவாலயங்கள் மீது நடத்தப்படும் தாக்குதல் சம்பவங்களில் இது ஏழாவது என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-4)

# புத்தகக் குண்டு வெடித்ததில் பத்திற்கும் அதிகமானோர் படுகாயம்

(பக்தாத்)

ஈராக்கின் புனித கர்பாலா நகரில் நேற்று இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சமபவத்தில் 10ற்கும் அதிக மானவர்கள் படுகாயமடைந்துள் ளனர்.

புனிதகர்பாலா நகரின் சாலை யில் புத்தகமொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித் ததிலேயே இந்த அனர்த்தம் ஏற் பட்டுள்ளது.

நேற்று முன்தினம் பக்தாத்தி லுள்ள அமெரிக்க இராணுவத் தலைமையகத்தின் மீது இடம் பெற்ற தற்கொலைத் தாக்குதலில் 22பேர் கொல்லப்பட்டதுடன் 20 பேர் காய மடைந்தனர். இச் சம்பவத்தின் அச் சம் நீங்குவதற்கு முன்னர் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளமை அப் பகுதியில் பெரும் பதற்றத்தை ஏற் படுத்தியுள்ளது.

அமெரிக்கா ஈராக்கிலுள்ள தனது படைகளை நாட்டிற்குத் திருப்பி அழைத்துப் புதிய படை களையும், ஆயுதங்களையும் ஈராக் கிற்கு மீண்டும் அனுப்ப முடிவு செய்துள்ள சில நாட்களுக்குள் இச் சமபவங்கள் இடம் பெற்றுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை, ஈராக்கில் நடை பெற்று வரும் தொடர்ச்சியான குண் டுத் தாக்குதல்கள் அதிபர் புஷ்ஷின ஈராக் தொடர்பான கொள்கைகள் தோல்வி கண்டுள்ளதை நிரூபித்துள் ளன என்று அமெரிக்க முன்னாள அதிபரும் கடந்த ஆண்டு சமாதானத் திறகான நோபல் பரிசை வென்ற வருமான ஜிம்மி காட்டா கூறியுள் ளார். (உ-2)



ஈராக் தலைநகர் பக்தாத்தில் உள்ள அமெரிக்க இராணுவத் தலைமையகத்தின் மீது நேற்று முன்தினம் இடம்பெற்ற தாக்குதலில் தீப் பற்றி எரியும் கட்டடம்.

## பக்றீரியா தாக்கத்தினால் பிரான்ஸில் 10 பேர் பலி

(பாரிஸ்)

பிரான்ஸிலுள்ள மிக முக் கிய மான உணவுத் தொழிற் சாலை களில் ஏற்பட்ட பக்றீரியா வைர ஸின் தாக்கத்தினால் 10 பேர் உயிரிழந் துள்ளனர்.

இதனையடுத்து அங்குள்ள உணவுத் தொழிற்சாலைகள் பல திடீரென மூடப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கையினை அந் நாட்டின் அரசாங்கமே மேற்கொண் டுள்ளது.

1976 ஆம் ஆண்டு பிரான்ஸில முதன்முதலாகப் பரவிய இவ் வாறான வைரஸ் காரணமாக 29 பேர் உயிரிழந்தனர். அதன் பின் னர் தற்போதே இவ்வாறான வைரஸ பரவியுள்ளது. (உ-9)



கடந்த ஆண்டு உலகையே கதிகலங்க வைத்த சார்ஸ் நோய், சீனாவில் தற்போது மீண்டும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதையொட்டி மக்கள் மிகவும் எச்சரிக்கையுடன் இருக்கின்றனர். தலைநகர் பெய்ஜிங் ரயில் நிலையத்தில் பாதுகாப்பான உடைகளுடன் காத்திருக்கும் தாயும், சேயும்.

# அமெரிக்க விமானம் அயர்லாந்தில் தரையிறக்கம்

(டப்ளின்)

அமெரிக்க விமானம் ஒன்று குண்டுப் புரளி காரணமாக அயர் லாந்தில் தரையிறக்கப்பட்டுள் ளது.

குறிப்பிட்ட விமானம் 144 பயணி களுடன் ஜேர்மனியில் இருந்து ஜோர்ஜியா நோக்கிச் சென்று கொண் டிருந்த போது சிற்பந்தியொருவர் விமானத்திலுள்ள கழிவறைக்குச் சென்ற சமயம விமானத்தில் குண்டு என்ற வாசகத்தைக் கொண்ட காகி தத் துண்டொன்றைக் கண்டெடுத் துள்ளார்.

இதனையடுத்து விமானம் உடன டியாக அயர்லாந்து விமான நிலை யத்தல் தரையிறககப்பட்டு சோத னையிடப்பட்டது.

எனினும் விமானத்தில் குண் டெதுவும் கண்டுபிடிக்கப்பட வில்லை என அயர்லாந்து விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இந்த விமானம் மீண்டும் எப்போது ஜோர்ஜியாவுக் குப் புறப்படும் என்பது குறித்து தெரி விக்கப்படவில்லை, (உ-2)



உலக அள வில் பேசப் படும் கார்க ளின் விவ ரங் களைக் கரைத் துக் குடித்த துடன் அவற் றை விளக்கி அதிசயத்தில் ஆழ்த்தும் ஆந்திரச் சிறு வன் சாய் கௌ சிக் வயது 4.

# அமெரிக்க ஹெலிகளை தாககியது கெரில்லாக்களின் நவீன ஆயுதங்கள்

## புதிய ஆய்வொன்று தெரிவிக்கின்றது

(பக்தாத்)

ஈராக்கிய கெரில்லாக்கள் அமெரிக்க விமானங்களைத் தாக் குவதற்கு நவீன ஆயுதங்களை யும் யுக்திகளையும் பயன்படுத்து வதாக புதிய தகவல் ஒன்று வெளி யாகியுள்ளது.

அமெரிக்க இராணுவத்தினரின் பல ஹெலிகொப்ரர்களை ஈராக் கிய கெரில்லாக்கள் சுட்டு வீழ்த் திய சம்பவங்களை அடுத்து கடந்த சில மாதங்களில் மட்டும் பல அமெ ரிக்க வீரர்கள் கொல்லப்பட்டனர்.

எந்தவித நவீன ஹெலி கொப்ரர் களையும கெரில்லாக்களின் தாக்கு தலில் இருந்து பாதுகாக்க அமெரிக கர்களால் எடுக்கப்பட்டு வரும் முய ற்சிகள் தோல்வியடைந்ததையடுத்து அனுபவம் வாய்ந்த ஆயுத நிபுணர் களால் அண்மையில் மேற்கொள் ளப்பட்ட ஆய்விலிருந்தே இத் தக வல் வெளியாகியுள்ளது. (உ-2)

## சட்டவிரோத குடியேற்றவாசிகள் 77பேர் கைது

(பியோங்யாங்)

சட்டவிரோத குடியேற்ற வாசி கள் 77 பேரை கிரேக்க அதிகாரி கள் கைது செய்துள்ளனர்.

வடகொரியாவில் இருந்து படகு மூலம் சென்ற இவர்கள் கிரேக்கத் திற்குள் சட்டவிரோதமாக நுழைய முயன்றார்கள் எனக் குற்றம்சாட் டப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்களில் 6 படகோட்டிகளும் 9 இந்தியர் களும் 4பாகிஸ்தானியர்களும் அடங்குவதாகத் தெரிவிககப்படு கின்றது.

ஏனையோர் எகிப்துப் பிரஜைகள் என்று கூறப்படுகின்றது. (உ-9)

## தீவிரவாதிகளின் தாக்குதல் உகண்டாவில் உச்சம்

### 18 பொதுமக்கள் பலி

(கம்பாலா)

உகண்டாவில் தீவிரவாதிகள் மேற்கொண்ட ஆட்லறித் தாக்கு தலில் 18 பேர் கொல்லப்பட்டுள் ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

உகண்டாவின் நக்ஸலைட் தீவிர வாதக் குழு நேற்றுமுன்தினம் இரவு மேற்கொண்ட தாக்குதலிலேயே 12 பெணகளும் 6 ஆண்களும் உயி ரிழந்தனர்.

இதேவேளை, இத்தாக்குதல் தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள உகண்டாவின் இராணுவப் பேச்சா ளர் சபான் பண்டாரீஷா,

இநதத் தாக்குதல் நக்ஸலைட் தீவிரவதா அமைப்பினரின் கண மூடித் தனமான செயல் என்றும்,

இவர்களது குறி உகண்டா மக் களை அழிப்பதாகவே உள்ளதென் றும் கூறியுள்ளார். (உ-9)




பெர்லினில் சனிக்கிழமை நடைபெற்ற 200 மீற்றர் உலகக் கோப்பை நீச்சல் போட்டியில் தனது உலக சாதனையை நிலைநாட்டிய மகிழ்ச்சியில் அமெரிக்க வீரர் எட் மோசஸ்.

உலக தரிசனம்

# அதிபர் புஷ்ஷின் குற்றச்சாட்டு ஆதாரமற்ற பழய கதை

## இந்தோனேஷிய முன்னாள் இராணுவத் தளபதி

(ஜகார்த்தா)

முன்னாள் இந்தோனேஷிய இராணுவத் தளபதியும் எதிர்கால ஜனாதிபதி பதவிக்கான வாய்ப்பைக் கொண்டுள்ளவருமான ஜெராஸ்ன்ஸ் ரோ அமெரிக்காவிற்குள் செல்வதற்கு தடைவிதிக்க வேண்டுமென்ற அமெ ரிக்காவின் கூற்றை ஜெராஸ்ன் ஸ்ரோ நிராகரித்துள்ளார்.

1999 ஆம் ஆண்டு கிழக்குத் தீமோர் சுதந்திரம் பெறுவதற்காக இடம்பெற்ற வாக்கெடுப்பின் போது ஐக்கிய நாடுகள் விசேட நீதி மன்றம் ஒன்றினால் ஜெராஸ்ன் ஸ்ரோ மனித உரிமைகள் மீறல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தார் என்று குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

இக்குற்றச்சாட்டை அமெ ரிக்கா தற்போது புதுப்பித்துள் ளதை அடுத்து இது ஆதாரமற்ற பழய கதை என்று கூறியுள்ள ஜெராஸ்ன்ஸ்ரோ,

அமெரிக்காவிற்குச் செல்லும் நோக்கம் எதுவும் தமக்குக் கிடை யாது என்றும் சிங்கப்பூர்,சீனா ஆகிய நாடுகளுக்கு தான் மேற் கொண்ட விஜயத்தின் போது அந் நாடடு தலைவர்களால் இத்தகைய பிரச்சினைகள் ஒன்றும் எழவில்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அமெரிக்க அதிபர் எதிர் வரும் ஜனாதிபதி தேர்தலுக்கான பிராசரத்தை தன் பக்கம் திசை திருபபவே இத்தகைய குற்றச் சாட்டுக்களை சுமத்தி வருகிறார் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-2)

# பொடா சட்ட எதிர் விளைவை ஜெயா தேர்தலில் எதிர்கொள்வார்

(சென்னை)

தமிழ் நாட்டில் பொடா சட் டத்தை தவறாகப் பயன்படுத்தி யதன் எதிர் விளைவை ஜெயல லிதா அரசு எதிர் வரும் மக்களவை தேர்தலில் எதிர் கொள்ள நேரிடும் என்று மக்கள் திராவிட முன்னேற்ற கழகத்தின் அவைத்தலைவர் எல். கணேசன் கூறியுள்ளார். நேற்று முன்தினம் சென்னையில் செய்தி யாளர்களிடம் பேசிய அவர், பயங்கரவாதத்தை ஒழிப்பதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட பொடா சட்டத்தை ஜெயலலிதா அரசு அரசியல பழிவாங கல்களுக்காக பயன்படுத்தியுள்ளது.

ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ உட்பட அக்கட்சித் தொண் டர்கள் எட்டுப்பேரை ஜெயலலிதா அரசு அவ்வாறே கைதுசெய்தது.

எனினும் ம.தி.மு.க. தொண்டர் கள் எட்டுப்பேரும் கடந்தவாரம் பிணையில் விடுவிக்கப்பட்டனர். கட்சியின் பொதுச்செயலர் வை.கோ இன்னும் சிறையிலே தடுத்து வைக் கப்பட்டுள்ளார். இவர் இம்மாதம் 25ஆம் திகதிக்குள் பிணையில் விடுதலையாவார் என எதிர்பார்க் கின்றோம்.

அவ்வாறு வை.கோ விடுதலை செயயப்படாது தொடர்ந்தும் சிறை யில் வைக்கப்பட்டால் அதன் எதிர் விளைவுகளை வரும் மக்களவைத் தேர்தலில் ஜெயலலிதா அரசு சந் திக்க நேரிடும். என்று தெரிவித் துள்ளார். (உ-2)

# மாணவர்களின் கல்வித்தர வீழ்ச்சிக்கு

# அரசியல்வாதிகளின் தலையீடே காரணம்

## பேராசிரியர் சோ.சந்திரசேகரன் கருத்து

(கொழும்பு)

**இலங்கையில் கல்வியின் தரம் வீழ்ச்சியடைந்து வருவதற்கு முக்கிய காரணம் சில அரசியல்வாதிகளின் தலையீடுகளால் தகுதியற்றவர்கள் மற்றும் தகுதி குறைந்தவர்கள் உள்வாங்கப்பட்டு கற்பித்தல் நடவடிக்கையில் ஈடுபடுத்தப்படுவதாகும்.**

**அத்துடன், ஆசிரியர்கள், அதிபர்களின் இடமாற்றங்களில் தலையிட்டு அவர்களை சர்வதேசப் பாடசாலைகளில் தொடர்ந்தும் பணியாற்றுவதற்கான ஏற்பாடுகளையும் சில அரசியல் வாதிகள் செய்து வருகின்றார்கள் என கொழும்பு பல்கலைக்கழக பேராசிரியர் சோ.சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.**

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத தாபனத்தினால் நடத்தப்பட்டுவரும் "விடியும் வேளை" நிகழ்வில் கலநதுகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்தும் கருத்துக் கூறுகையில்,

இத்தகைய அரசியல்வாதிகளின் தலையீடு காரணமாக மாணவர்களின் கல்வி பெரும் பாதிப்படைகின்றது. திறமை மற்றும் தகுதி வாய்ந்த ஆசிரியாகள், அதிபாகள் தொடர்ந்தும் சர்வதேசப் பாடசாலைகளில பணியாற்றுவதால் அப பாடசாலை மாணவர்களின் கல்வித் தரம் வளர்ச்சி அடைந்து வரும் அதே சமயம், கஷ்டப் பிரதேசப் பாடசாலை மாணவர்களின் கல்வித்தரம் வீழ்ச்சி அடைகின்றது.

இதன் காரணமாகவே தேசிய கல்வி ஆணைக்குழு ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் இடமாற்ற விடயங்களில் அரசியல் வாதிகள் எவரையும் தலையிட வேணடாம் என்ற பிரகடனம் ஒன்றை அரசு வெளியிட வேண்டும் என விதந்துரை செய்துள்ளது.

இதேவேளை, எமது நாட்டில் 90 வீதமான மக்கள் எழுத்தறிவுள்ளவர்களாக விளங்குவதற்கும் அரசியல்வாதிகளின் சில ஆககபூர்வமான செயற்பாடுகளே காரணம் என்பதையும் நாம் மறந்து விடக் கூடாது.

கல்வி விடயத்தில் இருந்து அரசியல்வாதிகள் முற்று முழுதாக பின்வாங்குவதைவிட, கல்வியின் தரததை உயர்த்தி அதனை வளர்ச்சியடையச் செய்வதற்கான வழிவகைகளை, உதவிகளை செய்வது மிகவும் வரவேற்கத்தக்கது.

இவை தவிர ஆண்டு 1முதல் ஆணடு 5வரையான வகுப்புக்களுக்கான அனைத்துப் பாடங்களையும் ஆங்கில மொழி மூலம் கற்பிக்க கல்வி அமைசசு எடுக்கும் நடவடிக்கைகள் வெற்றிபெறும் என்பது சாத்தியப்படாத விடயமாகவே இருக்கின்றது.

நாட்டில் 9ஆயிரத்து 800 அரச பாடசாலைகள் இருக்கின்றன. அத்தனை பாடசாலைகளிலும், இத் திட்டத்தை அமுல்படுத்துவது என்பது முடியாத காரியம்.

ஆங்கில ஆசிரியர்களுக்கு சாதாரணமாகவே பொருந்தட்டுப்பாடு நிலவி வருகின்றது. அத்துடன் ஆங்கிலப் பாடத்தை மட்டும் போதிப்பதே பெரும் சிரமமாக இருக்கின்றது.

இதனால்தான், தேசிய கல்வி ஆணைக்குழு, சில பாடங்களை மட்டும் ஆங்கிலத்தில் போதிக்குமாறு சிபார்சு செய்திருக்கின்றது.

அத்துடன், பாடசாலைக்குச் செல்லாதிருக்கும் மாணவர்கள் அனைவரும் கல்வி கற்கக்கூடிய வகையில் கட்டாயக்கல்வி சட்டத்தை அமுல்படுத்தவேண்டும் என்பதில் தேசியக் கல்வி ஆணைக்குழு காட்டியுள்ள அக்கறை மிகவும் வரவேற்கத்தக்க விடயம்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் போரினால் பாதிக்கப்பட்ட பல சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்ல முடியாதிருக்கின்றனா் பாடசாலைக்கு செல்ல வேணடிய வயதில் குடும்பச் சுமைகளை தோளில் தாங்கி கூலிவேலை செய்கின்றார்கள். அத்துடன், வறுமை காரணமாக பல சிறுவர்கள் போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இதனால் அவர்களுக்கு போஷாக்குணவு வழங்கும் திட்டமொன்றையும் அமுல்படுத்த அரசு நடவடிக்கை எடுத்துவருகின்றது.

இதேவேளை, பல்கலைச் கழகங்களுக்கு மிகக் குறைவான மாணவர்களே அனுமதி பெறுகின்றனர். குறிப்பாக வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழ்ப் பிரதேசங்களில் இருந்து பல்கலைக் கழகங்களுக்குச் செல்லும் மாணவர்களின எண்ணிக்கை வீழ்ச்சி கண்டுள்ளது. இதற்கு முக்கிய காரணம் கடந்த காலங்களில் இடம்பெற்ற போரே.

இவ்வாறு மிகுந்த சிரமங்களிற்கு மத்தியில் கல்விகற்று பலகலைக் கழகங்களுக்கு அனுமதி பெற்றுள்ள மாணவர்களும் தமது படிப்பை நிறைவு செய்து வேலையற்ற பட்டதாரிகள் என்ற பரிதாப நிலைக்குத் தள்ளப்படுகின்றார்கள்.

நாட்டில் தற்போது சுமார் 25 ஆயிரம் பட்டதாரிகள் வேலையில்லாமல் இருக்கின்றார்கள். இவர்கள் அனைவருக்கும் உடனடியாக வேலைவாய்ப்பை வழங்கக்கூடிய நிலையில் அரசு இல்லை.

ஏனெனில் கடந்த காலத்தில் பெரும் வீழ்ச்சி நிலையிலிருந்த நாட்டின் பொருளாதாரத்துறை தற்போதுதான் வளர்ச்சியை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது.

எனவே 25ஆயிரம் பட்டதாரிகளுக்கும் வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொடுக்குமளவிற்கு அரசிடம் நிதி இல்லை. நாட்டை அபிவிருத்தி செய்யவும் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்கவும உலக நாடுகளை கையேந்தி வருகினற அரசு இவர்களின் பரிதாபகரமான நிலைக்கு பரிகாரம் தேட முடியாத நிலையில் இருக்கின்றது.

இதற்கிடையில் பல்கலைச் கழக மாணவர்கள் அங்குள்ள நூல் நிலையங்களைப் பயன்படுத்தாது விரிவுரையாளர்கள் வழங்கும் குறிப்புக்களை மாத்திரமே உள்வாங்குகின்ற நிலையும் இங்கு காணப்படுகின்றது.

இதற்கு முக்கிய காரணம் பல்கலைக் கழகங்களில் உளள அதிகமான நூல்கள் ஆங்கிலத்திலேயே காணப்படுகின்றமையே. இதனால் தான் பல்கலைக் கழகத்தில் ஆங்கில பாடம் கட்டாய பாடமாக்கப்பட்டுள்ளது.

ஆயினும், பல்கலைச் கழக மாணவர்களிடையே ஆங்கில மொழி வளர்ச்சி கண்டதாகத் தெரியவில்லை.

அத்துடன், நாட்டில் உள்ள அனைத்துப் பல்கலைக்கழங்களிலும் உளள நூலகங்களில் போதிய அளவு தமிழ்மொழி மூல நூல்களைப் பெற்றுக்கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். என்றார். (உ-60,10)

# இந்திய அணி சுறுசுறுப்பான ஆட்டம்

## ஆட்டம் காணுமா ஆஸி. அணி

அவுஸ்திரேலியாவில் நடைபெற்றுவரும் மூன்று நாடுகள் பங்குபற்றும் மும்முனை ஒருநாள் சர்வதேச கிரிக்கெற் போட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் அவுஸ்திரேலிய அணியை 19ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்திய அணி வெற்றி கொண்டுள்ளது.

இந்திய அணியினரின் இந்த வெற்றியை அடுத்து இப்போட்டித தொடர் இவ்விரு அணிகளுக்குமிடையிலான பலப்பரீட்சையாக அமையுமென எதிர்பார்க்கப் படுகின்றது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்றதையடுத்து முதலில் துடுப்பெடுத்தாடிய இநதிய அணியினா் நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவா் முடிவில் 4 விக்கெற் இழப்பிற்கு 304 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர். இந்திய அணி சார்பில் துடுப்பாட்டத்தில் வி.வி. எக்ஸ். லக்ஷ்மன் ஆட்டமிழக்காமல் 103 ஓட்டங்களையும், சச்சின்டெண்டுல்கர் 86 ஓட்டங்களையும், ராகுல் ட்ராவிட் 74 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்து அணியின் ஓட்ட எண்ணிக்கைக்கு வலுச்சேர்த்திருந்தனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணியானது போட்டியின் இறுதிவரை விறுவிறுப்பான முடிவிற்காக போராடியிருந்தாலும் 48.4 ஓவர்கள் முடிவில் இந்திய அணி வெற்றிபெற 19 ஓட்டங்கள் உள்ள நிலையில் அவுஸ்திரேலிய அணியின் கடைசி விக்கெற்றும் கைப்பற்றப்பட்டது. இதன் காரணமாக 284 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் தனது அனைத்து விக்கெற்றுக்களையும் அவுஸ்திரேலிய அணி இழந்தது.

இந்த வெற்றியை அடுத்து இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டி வரை முன்னேற அவுஸ்திரேலிய இந்திய அணிகளுக்கே அதிக வாய்ப்பிருக்கின்றது. எனினும் இறுதிப் போட்டியில் அவுஸ்திரேலிய அணியை அதன் சொந்த மண்ணில் இந்திய அணி தோற்கடிகதுமா என பொறுத்திருந்து தான பார்க்கவேண்டும்.

(உ-68 )

# கே.கே. எஸ். வி.கவுக்கு

## வெற்றிக் கிண்ணம்

(சுண்டுக்குளி)

முடமாவடி ஞானவைரவா் விளையாட்டுக்கழகம், அமரா் பூபாலசிங்கம் ஞாபகார்த்தமாக யாழ்.மாவட்ட கரபந்தாட்ட சம்மேளனத்தின் அனுசரணையுடன், கழக ஆடுகளத்தில் கடந்த ஒருமாத காலமாக நடாத்தி வந்த கரபந்தாட்டச் சுற்றுப் போட்டித தொடரின், இறுதி ஆட்டங்களும், பாசளிப்பு வைபவமும் கடந்த 17ஆம திகதி மின்ஒளியில் விளையாட்டுக் கழகத்தின் தலைவா் பி.பாஸ்கரன் தலைமையில் நடைபெற்றன.

முதலில் இடம்பெற்ற 6வீரர்கள பங்குபற்றும் ஓவர்கேம் முறையிலான ஆட்டத்தில் வரணி விளையாட்டுக்கழக அணி, அதனை எதிர்த்து ஆடிய உடுவில் செண்மேரிஸ் விளையாட்டுக்கழக அணியை 2:1என்ற செற் கணக்கில் 12:15, 15:10, 15:12 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்றது.

அதனைத் தொடர்ந்து இடம் பெற்ற 4வீரர்கள் மாத்திரம் பங்குபற்றும் 30நிமிடங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட "ஓவர்கேம்" முறையிலான ஆட்டத்தில் வரணி விளையாட்டுக் கழகஅணி அதனை எதிரத்தாடிய வள்ளுவா் விளையாட்டுக்கழக அணியை 40:32என்ற புள்ளிகள் கணக்கில் வென்றது.

இறுதியாக இடம்பெற்ற 'செற் அப்' முறையிலான ஆட்டத்தில் கே.கே.எஸ்.விளையாட்டுக் கழக அணி அதனை எதிர்த்து ஆடிய விக்னேஸ்வரா விளையாட்டுக்கழக அணியை 3:2என்ற செற் கணக்கில் 28:26,23:25,28:26, 20:25,15:10 என்ற புள்ளிகள் அடிப்படையில் பலத்த போட்டியின் பின் வென்று சம்பியன் பட்டத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக நலலூா் பிரதேச செயலா் எஸ்.தெய்வேந்திரமும் சிறப்பு விருநதினராக யா.மா.வி.பொறுப்பாளர் மாறனும் கலந்துகொண்டனர்.

(உ-110)

# 2012 இல் ஒலிம்பிக் எங்கே?

## ஜூலையில் தகவல் வெளியாகும்

2012ஆம் ஆண்டுக்கான கோடை கால ஒலிம்பிக் போட்டிகளை நடத்துவதற்கான உரிமைகளைப் பெறும் பொருட்டு 9முன்னணி நகரங்கள் அதன் தகைமைகளை சர்வதேச ஒலிம்பிக் குழுவிடம் சமர்ப்பித்துள்ளன.

இவற்றில் 2012ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளை நடாத்துவதற்கான அதிக வாய்ப்புள்ள நகரங்களாக பரிஸூம் லண்டனும் திகழ்கின்றன.

பரிஸ் நகரின் வரலாற்றுச் சிறப்பு மிக்க ஈபிள் கோபுரத்தின் முதலாவது மாடியில் சென்ற வாரம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்ட அந்நாடடின் அதிகாரிகளினால் ஒலிம்பிக் போட்டிகளுக்காக பரிஸ் நகரின் தகைமைகள் பற்றிய தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இதேவேளை, 2012ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளை லண்டனில் நடாத்துவதற்கான தகைமைகள் பற்றிய அறிக்கை ஒன்றை லண்டனில் உள்ள ஓபேரா அரச மாளிகையில் வைத்து இங்கிலாந்து பரதமா் ரொனி பிளேயா் கடந்த வெள்ளிககிழமை வெளியிட்டிருந்தார்.

உலகில் மிகப் பிரபல்யமான விளையாட்டு விழாவான 2012ஆம் ஆண்டின் ஒலிம்பிக் போட்டிகளை நடாததுவதற்கான அனைத்து தகுதிகளும் லண்டன் நகரிற்கே இருப்பதாகவும் ரொனி பிளேயர் மேலும் தெரிவித்திருநதார்.

இதேவேளை, ஒலிம்பிக் போட்டிகளில் நடைபெறும் பீச்வொலி போல் போட்டிகளை பிரிட்டிஷ் பிரதமரின் உத்தியோகபூர்வ வாசஸ் தலத்திற்கு அருகாமையிலேயே நடத்துவதற்காக ஏற்பாடுகளையும் அதன் அதிகாரிகள் மேற்கொண்டுவருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த இரண்டு நகரங்களையும் தவிர 2012ஆம் ஆண்டுக்கான ஒலிம்பிக் போட்டிகளை நடாத்துவதற்கான அனுமதிகளை கேட்டு விண்ணப்பித்துள்ள நகரங்களான ஸ்பெயினின் மற்றிக்ஸ், ரஷ்யாவின் மொஸ்கோ, அமெரிக்காவின் நியூயோர்க், கியூபாவின் ஹவானா, துருக்கியின் இஸ்தான்புல், பிரேசிலின் டியோடி ஜெனிரோ, மற்றும் ஜேர்மனியின் லீவ்லிஸ்ட் ஆகியன அடங்குகின்றன,

எனினும், 2012ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளை நடாத்துவதற்கான தகுதியுடைய நகரம் எதுவென சர்வதேச ஒலிம்பிக்குழு இந்த வருடம் யூலை மாதத்தில் தெரிவிக்குமெனவும் தெரிவிக்கப்படுகின்றது. (உ-68)

# விளையாட்டுச் செய்திகள்

## இன்று ஒரு தகவல்

# முன் உதாரணம்

சந்திரகுப்தர் என்று ஓர் ராஜா இருந்தார் அல்லவா? அவரிடம் தலைமை அமைச்சராக இருந்தவர்தான் சாணக்கியர். அவர் ஓர் குடிசையில்தான் வாழ்ந்தார். அந்த ஊரில் ஏழைகள் எல்லோரும் குளிரால் கஷ்டப்படுகிறார்கள் என்று கேள்விப்பட்டார் ராஜா. உடனே நிறைய கம்பளிப் போர்வைகளை வாங்கி அனுப்பினார்.

அந்தப் போர்வைகளை எல்லாம் சாணக்கியரின் குடிசைக்கு அனுப்பிவைத்தார் எல்லோருக்கும் விநியோகம் செய்யச்சொல்லி. அதனால் அந்தப் போர்வைகள் யாவும் சாணக்கியரின் குடிசைக்குள் குவித்து வைக்கப்பட்டுள்ளன. இன்னும் விநியோகிக்கப்படவில்லை.

இந்த நேரம் பார்த்து அந்த ஊரில் உள்ள சில திருடர்கள் யோசனை செய்யதார்கள். "ராஜா கொடுத்தனுப்பிய போர்வைகள் யாவும் சாணக்கியரின் குடிசையில் தான் கிடைக்கும். இன்றிரவு எல்லோரும் தூங்கிய பின்பு அங்கு சென்றால் எல்லாவற்றையும் கொள்ளையடித்துக் கொண்டு வந்துவிடலாம். வேறு ஊர் சென்று விற்றுப் பிழைக்கலாம்" என்பதுதான் அந்தத் திருடர்கள் போட்ட திட்டம்.

அந்தத் திட்டத்தின் பிரகாரம் நடு இரவில் கிளம்பி மெதுவாக சாணக்கியரின் குடிசைக்குச் சென்றார்கள். சத்தம் செய்யாமல் உள்ளே நுழைந்தார்கள். ஒருபக்கம் கம்பளிகள் எல்லாம் குவிந்து கிடக்கின்றன. மறுபக்கம் சாணக்கியரும் அவரது தாயாரும் உறங்கிக் கொண்டிருந்தனர்.

தரையில் ஒரு பாயைப் போட்டு கிழிந்து போன ஒரு கம்பளித் துணியால் போர்த்திக்கொண்டு தூங்கினார்கள். கம்பளி முழுவதும் கிழிசல் மயம். அதனால் குளிரில் அவர்களது உடல் நடுங்கிக்கொண்டிருந்தது.

திருடர்களுக்கு இதைப் பார்த்ததும் ஒரே ஆச்சரியம். "என்ன இது... ஒருபக்கம் இவ்வளவு புதுக்கம்பளிகள் குவிந்து கிடக்கின்றன. அவற்றை விட்டுவிட்டு கிழிந்து போன ஒரு கந்தல் கம்பளியைப் போர்த்திக்கொண்டு கஷ்டப்படுகின்றார்களே" என்ற ஆச்சரியம். உடனே அவர்கள் தாம் வந்த காரியத்தை விட்டுவிட்டு சாணக்கியரை எழுப்பினார்கள். அவரும் எழுந்து உட்கார்ந்து ஒன்றும் புரியாமல் இவர்களைப் பார்த்தார்.

"ஐயா... நாங்கள் எல்லோரும் திருடர்கள். நாங்கள் கம்பளி திருடுவதற்காகத்தான் இங்கே வந்தோம். ஆனால் உங்கள் நிலையைப் பார்த்ததும் எங்களுக்கு ஒரு சந்தேகம். அதைக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் என்றுதான் உங்களை எழுப்பினோம்" என்றனர் "என்ன சந்தேகம்? " என்றார் சாணக்கியர். "உங்கள் குடிசைக்குள்ளே ஒரு பக்கம் நல்ல கம்பளிகள் குவிந்துள்ளன. அதை விடுத்து ஓட்டைக் கம்பளியால் உடலை மூடிக்கொண்டு கிடக்கின்றீர்களே... ஏன் இப்படிச் செய்கிறீர்கள்? என்று கேட்டனர். "அந்தக் கம்பளியை நான் எடுத்தேன் என்றால் நானும் உங்களை மாதிரித்தானே!" என்றார் சாணக்கியர்.

திருடர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. சாணக்கியர் விபரமாகக் கூறினார் "நான் வைத்திருப்பது கிழிந்து போன கம்பளி. இது போல் கிழிந்து போன கம்பளிகூட இல்லாத

# புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின் புலிகளுடன் பேச்சுக்கள் ஆரம்பம்

## ஜே.வி.பி. - ஸ்ரீ.சு.க. வட்டாரங்கள் தகவல்

(கொழும்பு

ஜே.வி.பி. - ஸ்ரீ.சு.க. கூட்டணிக்கான புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திட்டவுடன் புலிகளுடன் நியாயமான சூழ்நிலையில் பேச்சுக்களை ஆரம்பிப்பதே தமது நோக்கம் என சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சமாதானச் செயற்பாடுகளை மீள ஆரம்பிக்கும் தேவையும் தற்போதைய பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வும் காணவேண்டியிருப்பதால் புலிகளுடன் பேசுவதன் அவசியத்தை இரு கட்சிகளும் நன்றாகவே உணர்ந்துள்ளன.

ஜே.வி.பி.- ஸ்ரீ.சு..க புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடும் இன்றைய வைபவம் தேசிய அளவில் கொண்டாடப்படவுள்ளதுடன், தேர்தல் தொகுதி மட்ட கொண்டாட்டங்களை இரு கட்சிகளும் இணைந்து நடாத்தவிருக்கின்றன. பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறும் இந்நிகழ்வில் கலந்துகொள்ள ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க இலங்கை வரவிருப்பதையே ஜே.வி.பி. வட்டாரங்கள் உறுதிசெய்தன.

இக்கூட்டணி தேர்தலுக்காக அல்ல என்றும் இதில் ஐந்து கொள்கைகள் உள்ளடக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்துள்ள பொ.ஐ.மு. பேச்சாளர் சரத் அமுனுகம அவையாவன: உள்ளூர் பொருளாதாரத்தை தரமுயர்த்துதல், இனப்பிரச்சினைத் தீர்வுக்கு ஒன்றிணைந்து செயற்படல், நாட்டினதும் கலாசாரத்தினதும் பாரம்பரியத்தை பாதுகாத்தல், கண்டிப்பான வெளியுறவுக் கொள்கைகளையும் நாட்டில் கண்டிப்பாக ஜனநாயகத்தையும் கடைப்பிடித்தல் என்பனவாகும் எனத் தெரிவித்துள்ளார்.

இக்கூட்டணி ஒரு தலைவர், தவிசாளர், அமைப்பாளர் ஆகியோரையும் பெரியளவான அங்கத்தவர்களையும் கொண்ட நிறைவேற்றுச் சபையையும் கொண்டது. அத்துடன், உள்நாட்டு வளங்களை வெளிநாடுகளுக்கு விற்கும் நடவடிக்கையை நிறுத்த இக்கூட்டணி பாடுபடும் என்றும், இதனால் வர்த்தக சமூகம் அச்சமடையத் தேவையில்லை என்றும் உள்ளூர் வார்த்தகர்களுக்கு இக்கூட்டணி உதவும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(உ-6)

# மதமாற்றத்திற்கு நிர்ப்பந்திப்பவருக்கு 7 வருடச் சிறை; 5 இலட்சம் அபராதம்

(கொழும்பு)

கடந்த வாரம் பாராளுமன்றத்தில் வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்டிருந்த மதமாற்றச் சட்டமூலம் இன்னும் 60 நாட்களுக்குள் அமுல்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இச்சட்டம் அமுல்படுத்தப்படவேண்டியதன் அவசியம் உணர்ந்து ஜனாதிபதியின் சம்மதத்துடன் பிரதமர் உத்தரவிட்டதற்கிணங்க சகல மதங்களையும் சேர்ந்த மதத்தலைவர்களின் விசேட குழுவினரே இச்சட்டமூலத்தை தயார் செய்திருந்தனர். இக்குழுவில் அமைச்சர்களான மகேஸ்வரன், ஹக்கீம் , ஜோன் அமரதுங்க, லொக்குபண்டார ஆகியோரும் அடங்கியிருந்தனர். மதமாற்றத்தைக் கட்டுப்படுத்தும் சட்டமானது கருத்துச் சுதந்திரம், மனச்சான்று மற்று மதத்தைப் பாதுகாக்கும் சட்டம் என அழைக்கப்படும் என புத்தசாசன அமைச்சர் லொக்குபண்டார தெரிவித்துள் ளார்.

இதன் படி, ஒருவரை ஒரு மதத்தில் இருந்து வேறொரு மதத்திற்கு மாறும்படி வற்புறுத்தவோ, ஒத்துழைக்கவோ, பிரசாரம் செய்யவோ முடியாது. எவரேனும் கிரிமினல் நடைமுறைச்சட்டத்தின் 2,3,4,5,6,7 ஆகிய பிரிவுகளை மீறுவராயின் சட்டப்படி குற்றமிழைத்தவராவார். அவருக்கு 5 வருடங்களுக்குக் கூடாத சிறைவாசமும் அத்துடன் ஒரு இலட்ச ரூபாவிற்கு மேற்படாத அபராதமும் விதிக்கப்படமுடியும்.

18 வயதிற்கு குறைந்த ஒருவர் மீது மதமாற்றம் நிர்ப்பந்திக்கப்படுமாயின் நிர்ப்பந்தித்தவருக்கு 7 வருடங்களுக்கு மேற்படாத சிறையும் 5 இலட்ச ரூபாவிற்கு மேற்படாத அபராதமும் விதிக்கப்படலாம் என லொக்குபண்டார தெரிவித்துள்ளார்.

இதே குற்றங்களை வெளிநாட்டவர் ஒருவர் செய்யுமிடத்து அவர் உடனடியாக நாடு கடத்தப்படுவார். அத்தகையவர் சட்டத்தின் 12ஆம் பிரிவின்படி" விஜயம் செய்வதற்கு தடை செய்யப்பட்டவர்" என பிரகடனம் செய்யப்படுவார். (த-6)

## இராசி பலன்

**20 .01. 2004**

**(தை 6, செவ்வாய்க்கிழமை)**

| | | |
|---|---|---|
| திரயோதசி | காலை | 7.16 வரை |
| சதுர்த்தசி | பின்னிரவு | 5.10 வரை |
| மூலம் | முற்பகல் | 10.38 வரை |
| இராகுகாலம் | 3.35-05.05 மணிவரை | |
| சுபநேரம் | 11.05-12.35 மணிவரை | |

அமிர்தசித்தம்

**மேடம்**

பெரியோர் ஆதரவு, புதியதிட்டமிடல், முயற்சி தாமதம், பித்தரோகம்.

**இடபம்**

திருடர் பயம், எதிர்பாராத பிரச்சினை, காரிய தாமதம், பிரயாணக் கஷ்டம்.

**மிதுனம்**

எடுத்த காரியம் கைகூடும், நல்ல வரவேற்பு, தொழில் கஷ்டம், குடும்ப மகிழ்ச்சி.

### பெற்றோல் விநியோக

# புதிய நடைமுறை குறித்து மீனவர்கள் அதிருப்தி

(திருநெல்வேலி)

வட பிராந்திய பெற்றோலியக் கூட்டுத்தாபன சிரேஷ்ட முகாமையாளர் எஸ். அந்தோனிப்பிள்ளையின் கொள்கலன்களில் 10 லீற்றருக்கு மேல் எரிபொருள்களை விநியோகிக்கக்கூடாது என்ற அறிவிப்புக் குறித்து வடமராட்சிக் கடற்றொழிலாளர் சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது. யாழ். குடாநாட்டில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்கள் கொள்கலன்களில் 10 லீற்றருக்கு மேல் எரிபொருள் விநியோகிக்க வேண்டாம். அவ்வாறு உத்தரவை மீறி எரிபொருள்களை விநி

திருடர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. சாணக்கியர் விபரமாகக் கூறினார் "நான் வைத்திருப்பது கிழிந்து போன கம்பளி. இது போல் கிழிந்து போன கம்பளிகூட இல்லாத ஏழை எளிய மக்களுக்கு கொடுத்தனுப்புவதற்கென ராஜா தந்த கம்பளிகள் அவை.

"அந்த ஏழைகள் தான் இந்தப் புதிய கம்பளிகளுக்குச் சொந்தக்கரர்கள். அதை எடுத்து நான் போர்த்தினால் நானும் திருடன். தான் அதனால் அதை நான் எடுக்க மாட்டேன்" என்றார்.

திருடர்களின் மனதில் முள்ளால் குத்தியது போல் இருந்தது. இனி திருடவே மாட்டோம் என்று கூறி வந்த தற்காக மன்னிப்பும் கேட்டுவிட்டு அவர்கள் போய்விட்டனர்.

உயர்ந்த பதவியில் இருப்பவர்களுடைய முன் உதார ணம் தான் அடிமட்டத்தில் உள்ளவர்களது மனதைத் தூய்மைப்படுத்த வேண்டும். இந்தக் காலத்தில் அப்படியா உள்ளது?

ஒரு வீட்டில் திருட்டு போய்விட்டது. பறிகொடுத்தவர் மிகவும் கோபமாக இருந்தார். "பரவாயில்லை விடுங்கள் எப்படியும் கண்டு பிடித்துவிடலாம்" என்று பக்கத்தில் இருந்தவர்கள் கூறினார்கள். இவர் மறுபடியும் கோப்பமா கக் கூறினார் "என் வீட்டில் இருந்த நகை திருட்டுப் போனதனால் நான் கவலைப்படவில்லை. அந்தத் திருடன் செய்த இன்னுமோர் காரியம் தான் எனக்கு கோபத்தை உண்டாக்கிவிட்டது" என்றார்.

"நகை பணத்தையெல்லாம் சுருட்டி எடுத்து கட்டிக் கொண்டு புறப்படும்போது அவன் என்னைத் தட்டியெழுப்பி "கதவைத் தாழ்ப்பாள் போட்டுக்கொள்ளுங்கள் திருட்டுப் பயம் அதிகமாக உள்ளது" என்று கூறிவிட்டு போனான் சார்" என்றார் ஆவேசமாக.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

**மிதுனம்**

**எடுத்த காரியம் கைகூடும், நல்ல வரவேற்பு, தொழில் கஷ்டம், குடும்ப மகிழ்ச்சி.**

**கடகம்**

**உடல் நலம், புதிய திருப்பம், வாக்குமேன்மை, முயற்சி கைகூடும்.**

**சிங்கம்**

**வியாபார நன்மை, கௌரவக்குறைவு, நல்ல முயற்சி, மனச் சோர்வு.**

**கன்னி**

**மாதர் சுகம், வேலைச்சுமை, எடுத்த காரியம் தாமதமாகும், மனப்பயம்.**

**துலாம்**

**அன்னியர் சந்திப்பு, எடுத்த கருமங்கள் கைகூடும், புதிய பொருள் சேர்க்கை, உடல் நலம்.**

**விருச்சிகம்**

**தனவிரயம், கடுமையான வார்த்தை, சகோதரர் வழி நன்மை, முயற்சி தாமதம்.**

**தனுசு**

**தேகநலன், சிந்தனை மிகுதி, போசன நன்மை, காரிய சித்தி.**

**மகரம்**

**உஷ்ண ரோகம், பிரயாண அலைச்சல், உறவினர் சந்திப்பு, பண விரயம்.**

**கும்பம்**

**தடைப்பட்ட காரியம் கைகூடும், புதிய பொருள் சேர்க்கை, போசன சுகம், பெருமை அடைதல்.**

**மீனம்**

**தூரதேச செய்தி, செய்தொழில் மேன்மை, எடுத்த காரியம் கைகூடும்.**

**(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)**

**- வளவன்.**

குறித்து வடமராட்சிக் கடற்றொழிலாளர் சங்கம் கண்ட னம் தெரிவித்துள்ளது. யாழ். குடாநாட்டில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்கள் கொள்கலன்களில் 10 லீற்றருக்கு மேல் எரிபொருள் விநியோகிக்க வேண்டாம். அவ்வாறு உத்தரவை மீறி எரிபொருள்களை விநி யோகிக்கும் விற்பனை நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என வட பிராந்திய பெற் றோலியக் கூட்டுத் தாபனத்தின் சிரேஷ்ட முகாமை யாளர் அறிவித்திருந்தார்.

ஆனால், ஆழ்கடலில் மீன்பிடிக்கச் செல்லும் மீனவர் களுக்கு நாள் ஒன்றிற்கு 40 லீற்றர் பெற்றோல் தேவைப் படுகின்றமையினால் முகாமையாளரின் இந்த அறிவிப் பினால் கடற்றொழிலாளர்கள் பெரும் பாதிப்பை எதிர்நோக்கவுள்ளனர். எனவே, இந்நடைமுறையைத் தளர்த்தி தேவையான எரிபொருளை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என சம்பந்தப்பட்ட அதி காரியை வடமராட்சிக் கடற்றொழிலாளர் சங்கம் கேட் டுள்ளது. (உ-43)

## வட்டுக்கோட்டை கிழக்கு அபிவிருத்தி பற்றி ஆராய்வு

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை கிழக்கு அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் வட்டு. கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தில் சிவ.பால சுப்பிரமணியம் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பங்கேற்ற யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என். ரவிராஜ் கருத்துக் கூறுகையில்,

நிலையான சமாதானம் ஏற்பட்டால் மாத்திரமே யாழ். மாவட்ட அபிவிருத்திக்கு உரிய நிதியை நாம் எதிர்பார்க்க முடியும் அதுவரை, எமக்கு வழங்கப் படுகின்ற அற்பசொற்பமான நிதியைக் கொண்டே அபிவிருத்திப் பணிகளுக்கு உதவி வருகின்றோம் எனக் குறிப்பிட்டார்.

வட்டு. கிழக்கு கிராம உத்தியோகத்தர் க.ஸ்ரீகரன், யாழ். சமூக பொருளாதார மேம்பாட்டுப் பேரவைத் தலைவர் எஸ். இராசதுரை ஆகியோர் இதில் கருத்துரைகளை வழங்கினர். (உ-89)

# இந்திய கடற்படை உதவியுடன் இந்திய மீனவர்கள் அத்துமீறல்

## வடமராட்சி கடற்றொழிலாளர் முறைப்பாடு

(திருநெல்வேலி)

இந்தியக் கடற்படையினர் சகிதம் பல நூற்றுக்கணக்கான இழுவைப் படகுகள் மற்றும் சிறுலம்பாடி இயந்திரம் பொருத்தப்பட்ட இந்திய சிறு குல்லாக்கள் வடமராட்சிக் கடலில் அத்துமீறி தொழிலில் ஈடுபடுவதாக இன்பருட்டி, சக்கோட்டை, சுப்பர்மடம் ஆகிய பகுதிகளில் உள்ள கடற்றொழிலாளர் சங்கங்கள் வடமராட்சி கடற்றொழிலாளர் சமாசத்தில் முறைப்பாடு செய்துள்ளன.

இது தொடர்பாக இன்பருட்டி கடற்றொழிலாளர் சங்கம் 524 படைத்தள தலைமையகத்திலும் முறைப்பாடு செய்துள்ளது.

இந்திய மீனவர்களின் தொடர்ச்சியான இவ் அத்துமீறல் நடவடிக்கையால் வடமராட்சி கடற்றொழிலாளர்கள் பெரும் பாதிப்படைந்து வருவதாகவும் இன்பருட்டி கடற்றொழிலாளர் சங்கம் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இந்திய மீனவர்கள் இந்தியக் கடற்படையினருடன் இலங்கையில் மீன்பிடிக்க வந்திருப்பது இதுவே முதற்தடவை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-43)

திலங்க சுமதிபால மீதான குற்றச்சாட்டு

# புதிய நீதிபதியின் கீழ் விசாரணை ஆரம்பம்

(கொழும்பு)

இலங்கை கிரிக்கெற் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் திலங்க சுமதிபால மீதான வழக்கு விசாரணைகள் நேற்றுமுதல் மீண்டும் ஆரம்பமாகியுள்ளன.

கொழும்பு மஜிஸ்ரேட் நீதிமன்றத்தில் புதிய நீதிபதியின் கீழ் இவ்வழக்கு விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன.

சுட்டுக்கொல்லப்பட்ட பாதாள உலகக்கோஷ்டித் தலைவர் தம்மிக்க அமரசிங்கவுக்கு போலிக் கடவுச்சீட்டுக்களை வழங்கினார் என்ற குற்றச்சாட்டு இவர் மீது சுமத்தப்பட்டிருந்தது.

இவ்வழக்கு விசாரணைகள் கொழும்பு பிரதான மஜிஸ்ரேட் பி.பி. போயாகொடவின் கீழ் நடைபெற்றுவந்தன. ஆனால், பிரதான மஜிஸ்ரேட் திலங்க சுமதிபாலவிற்கு சாதகமான தீர்ப்பை வழங்கி வருகிறார் என்ற குற்றச்சாட்டுக்களை அடுத்து பிரதான மஜிஸ்ரேட் அவ்வழக்கு விசாரணைகளில் இருந்து விலகுவதாக அறிவித்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து இவ்வழக்கு விசாரணைகள் புதிய நீதிபதியின் கீழ் நேற்று ஆரம்பமாகியுள்ளன.

கிரிக்கெற் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் திலங்க சுமதிபாலவின் உடல் நிலை ஆரோக்கியமற்றிருப்பதால் அம்புலன்ஸ் வண்டி மூலமாகவே அவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த வேண்டும் என அவரது சட்டத் தரணிகள் விடுத்த வேண்டுகோளை கொழும்பு மேலதிக நீதிவான் ஏற்றுக்கொண்டார்.

இதேசமயம், திலங்க சுமதிபால நீதிமன்றில் ஆஜராகுவதற்கு ஏற்ற தேக ஆரோக்கியத்துடன் இருப்பதாக கொழும்பு வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி நீதிமன்றிற்கு தெரிவித்தார். (தி-60,10)

ஜே.வி.பி. - ஸ்ரீ.சு.க. கூட்டு

# பொதுஜன ஐக்கிய முன்னணியின் செயற்பாடுகளைப் பாதிக்கும்

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணியுடனான கூட்டமைப்புப் பற்றி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தங்களுடன் எதுவித பேச்சுக்களையும் நடத்தவில்லையென லங்கா சமசமாஜக் கட்சியின் பிரதான செயலாளர் பட்டி வீரக்கோன் குற்றம் சாட்டியுள்ளார்.

இக்கூட்டமைப்புத் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் கடித மூலம் விளக்கங்களைக் கோரியபோதிலும், அவர் பதில் எதனையும் தரவில்லை.

பொது ஜன ஐக்கிய முன்னணியினுள் அங்கம் வகிக்கும் கட்சி என்ற ரீதியில் இக் கூட்டமைப்புக் குறித்து அதிக கவனம் செலுத்த வேண்டிய நிலை எமது கட்சிக்கு ஏற்பட்டுள்ளது.

இதனால் இக்கூட்டமைப்புத் தொடர்பாக இருவாரங்களுக்குள் பதில் அளிக்க வேண்டும் என ஸ்ரீ.சு. கட்சியிடம் நான் கோரிக்கை விடுத்துள்ளேன்.

எனினும், இக் கூட்டமைப்புக் குறித்து எதுவித தகவல்களையும் பொது ஜன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகளுக்கு தெரிவிக்காமலே இரு கட்சிகளும் இத் தீர்மானத்தினை எடுத்துள்ளன என்றார்.

இதேவேளை, இக் கூட்டமைப்பினை தாங்கள் வரவேற்பதாக தேசிய ஐக்கிய முன்னணியின் சிரேஷ்ட உப தலைவர் எம்.எல். ஏ. எம். கிஸ்புல்லா தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டிலுள்ள எல்லா அரசியல் கட்சிகளும் ஒன்றுசேர வேண்டும் என்ற நோக்குடனே இக் கூட்டமைப்பு கைச்சாத்திடப்படவுள்ளது.

ஆனாலும், பொது ஜன ஐக்கிய முன்னணி அங்கம் வகிக்கும் கட்சி என்ற ரீதியில் இக்கூட்டமைப்புக் குறித்து இன்னும் தெளிவான விளக்கங்கள் தரப்படவில்லை.

சுமார் இரு வாரங்களுக்கு முன்பு ஜனாதிபதியை சந்தித்த போது அவர் இது குறித்து மேலோட்டமான விளக்கங்களை அளித்தார்.

இச்சந்திப்பின்போது கூட்டமைப்புத் தொடர்பான விளக்கங்களைத் தரவேண்டும் என அவரிடம் கோரியுள்ளோம் இதுவரை பொதுஜன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளுக்கு விளக்கமளிக்கப்படவில்லை.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் பொதுஜன ஐக்கிய முன்னணியில் ஓர் அங்கத்துவக் கட்சி. ஆகவே, அதனுடன் இவ் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் போது பொதுஜன ஐக்கிய முன்னணியின் இயக்கம் இல்லாமல் போய்விடும் என எண்ணத் தூண்டுகிறது என்றார். (தி-60)

# செய்தித் துளிகள்

### வெடியினால் விபரீதம்

(வடலியடைப்பு)

பட்டாசுகளில் இருந்து பெற்ற வெடி மருந்துகளை ஒன்று சேர்த்து குழாயில் இட்டு தீ வைத்த போது அது வெத்துச் சிதறியதில் எரிகாயங்களுக்குள்ளான சிறுவன் சிகிச்சையின் பொருட்டு சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளான்

கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்திற்கு அண்மையில் வசிக்கும் கா. சிவகுமார் (வயது-9) என்ற சிறுவனே இவ்வாறு எரிகாயங்களுக்குள்ளாகியுள்ளான். (உ-21)

### சைக்கிள் திருட்டு

(வடலியடைப்பு)

வீட்டு விறாந்தையில் பூட்டி வைக்கப்பட்டிருந்த சைக்கிள் பட்டப்பகலில் களவாடப்பட்டுள்ளது. சண்டிலிப்பாய் மடத்தடிப் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் பொ.கந்தையா என்பவரின் சைக்கிளே களவாடப்பட்டுள்ளது. (உ-21)

### பொதுச்சபைக் கூட்டம்

(வடலியடைப்பு)

மானிப்பாய் கோவில் பற்று ப.நோ. கூ. சங்கத்தின் 16வது வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.00மணிக்கு சங்கத் தலைமைக் காரியாலயத்தில் தலைவர் மா. செல்வராசா தலைமையில் நடைபெறவுள்ளது.(உ-21)

### சான்றிதழ் வழங்கல்

(மருதங்கேணி)

கிளிநொச்சி தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் தொழில்நுட்ப பயிற்சிகளை முடித்து வெளியேறிய ஒரு தொகுதி மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்கும் வைபவம் எதிர்வரும் 24ஆம்திகதி சனிக்கிழமை இடம்பெறவுள்ளது. (உ-35)

### மதுப்பிரியர்களால் தொல்லை

(ஆனைக்கோட்டை)

மானிப்பாய் பிப்பிலி சந்தி, சங்கானை மண்டிகைக்குளம் ஆகிய இடங்களில் மதுப்பிரியர்களின் தொல்லை அதிகரித்துள்ளது.

இதனால் அப்பகுதியால் சென்று வரும் பாதசாரிகள், பாடசாலை மாணவர்கள் பெரும் இடைஞ்சல்களை எதிர்நோக்கி வருகின்றனர். (தி-201)

### நீர் வழங்கல் மட்டுப்படுத்த நடவடிக்கை

(கொழும்பு)

தற்போது காணப்படும் வரட்சியான சூழலை அடுத்து நாடு முழுவதிலுமான நீர் வழங்கலை மட்டுப்படுத்த தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்புச் சபை நடவடிக்கை எடுத்துவருகிறது.

இவ் வாரத்திலிருந்து இம் மட்டுப்படுத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என சபையின் பதில் தலைவர் வெத்தானந்த தெரிவித்தார்.

தற்பொழுது நாடு முழுவதும் நிலவும் வரட்சியான காலநிலை காரணமாக நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் குறைவடைந்து விட்டது. இதனை சுட்டிக்காட்டியே தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்புச்சபை இந் நடவடிக்கையை முன்னெடுக்கவுள்ளதாக அறிவித்துள்ளது. (தி-4)

### வெடிமருந்துக்கு மூட்டிய தீ முகத்தைப் பதம் பார்த்தது

(யாழ்ப்பாணம்)

வெடிமருந்துகளை ஒன்று சேர்த்து அதற்குத் தீ மூட்டிய சிறுவன் முகத்தில் எரிகாயங்களுக்குள்ளான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான்.

நேற்று முன்தினம் மு.ப. 10.30 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் வேலணையைச் சேர்ந்த கே. அஜந்தன் (வயது-8) என்ற சிறுவனே எரிகாயங்களுக்குள்ளானான். (த-7)

### அழகுக் கலை கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

திருகோணமலை பொஷ் நிறுவனத்தின் வழிகாட்டலில் எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதலாம் திகதி யாழ்.மத்திய கல்லூரியில் அழகுக் கலைக் கண்காட்சி இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வை இந்து கலாசார அமைச்சின் செயலாளர் து. வைத்திலிங்கம் ஆரம்பித்து வைக்க, இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன் பிரதம விருந்தினராகப் பங்கேற்கவுள்ளார். (உ-89)

### அமெரிக்க தூதரகம் மறுப்பு

(கொழும்பு)

அமெரிக்கக் காங்கிரஸ் அதிகாரிகளும் விடுதலைப் புலிகளின் அரசியல் பிரமுகர்களும் இரகசிய பேச்சுவார்த்தை ஒன்றில் ஈடுபட்டுள்ளதாக வெளியான தகவல்களை அமெரிக்கத் தூதரகம் மறுத்துள்ளது.

மேற்படி சந்திப்பு கொழும்பில் உள்ள ஜேர்மனிய தூதரகத்தில் இடம்பெற்றதாக சுட்டிக்காட்டி வெளியாகியுள்ள தகவல்களுக்கே இலங்கைக்கான அமெரிக்க தூதரகப் பிரதிநிதி போடிரெயிலர் மறுப்பு வெளியிட்டுள்ளார். (உ-4)

இந்தியா~இலங்கை

# பாதுகாப்பு ஒப்பந்தம் குறித்து ஜனாதிபதியிடம் அறிக்கை சமர்ப்பிப்பு

(கொழும்பு)

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான பாதுகாப்பு ஒப்பந்தம் குறித்து நேற்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் இரு நாடுகளுக்கும் இடையிலான முக்கிய தலைவர்கள் மற்றும் பாதுகாப்பு உயர் அதிகாரிகள் புதுடில்லியில் சந்தித்து பாதுகாப்பு ஒப்பந்தம் குறித்து கலந்துரையாடினர்.

இக் கலந்துரையாடல் தொடர்பான விபரங்கள் அடங்கிய அறிக்கையே ஜனாதிபதியிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டது.

அவரிடம் கையளிக்கப்பட்ட அந்த அறிக்கையில், இரு நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பு, இராணுவப் பயிற்சிகள், கடற்படை மற்றும் விமானப் படைகளுக்கான ஆயுதக் கொள்வனவுகள், பிராந்தியப் பாதுகாப்பு, பயங்கரவாதம் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளன.

இலங்கைக்குத் தேவையான பாதுகாப்புக் குறித்து இந்தியாவின் நிலைப்பாடு, அதனை வழங்கக் கூடிய வழிமுறைகள் என்பன பற்றியும், இரு நாடுகளுக்கும் இடையே கைச்சாத்திடப்படவுள்ள பாதுகாப்பு ஒப்பந்தம் அடுத்த மாதம் பூர்த்தியாகும் எனவும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (தி-60)

# இனங்களின் அபிலாஷைகளை புறந்தள்ளி விட முடியாது

## வசீர் சேகுதாவுத் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் வாழும் எந்தவொரு இனமும் ஏனைய சமூகங்களில் அரசியல் அபிலாஷைகளை புறந்தள்ளி விட்டு தமது சமூகத்திற்கான தீர்வினைப் பெற்றுக்கொள்ள முடியாது.

இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தவிசாளரும், வீடமைப்புப் பிரதி அமைச்சருமான வசீர் சேகுதாவுத் ஏறாவூரில் நடைபெற்ற நிகழ்வொன்றின்போது தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில், இலங்கையில் வாழும் அனைத்து இனமக்களும் சமத்துவமான அரசியல் உரிமைகளை அனுபவிக்கும்போது மாத்திரமே நாட்டில் நிரந்தரமான அமைதியை ஏற்றபடுத்த முடியும்.

நாட்டின் எதிர்கால நிலைமைகளை கருத்தில் கொண்டு சமாதானம் நோக்கிய தேசிய பயணம் உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டும். இல்லையேல் , கடந்த காலங்களில் ஏற்பட்ட பின்னடைவுகளை விட அனைத்துத் துறைகளிலும் பாரிய நெருக்கடிகளை சந்திக்க நேரிடும்.

இதனை அரசியல்வாதிகளும், அரசாங்கமும் உணர்ந்துள்ளன.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, மக்கள் விடுதலை முன்னணிக்கு இடையிலான கூட்டமைப்பு நாட்டில் பாரிய நெருக்கடிகளைத் தோற்றுவிக்கும். இதனை சில அரசியல் கட்சிகளும் உணர்ந்துள்ளன என்றார். (தி-60)

# மாட்டைக் குளிப்பாட்டச் சென்ற மாணவர்கள் இருவர் மரணம்

## தருமபுரத்தில் துர்ச்சம்பவம்

(மருதங்கேணி)

குளிக்கச்சென்ற மாணவர்கள் இருவர், குளத்தில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்தனர்.

கடந்த வெள்ளியன்று இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் தருமபுரம் முதலாம் யூனிற்றைச் சேர்ந்த தருமபுரம் மகாவித்தியாலய தரம் 8 மாணவன் கு.குணரூபன் (வயது 12), அதே பாடசாலையில் தரம் 11இல் கல்வி கற்கின்ற எஸ்.சுஜீபன் (வயது 16) ஆகியோரே மரணமானவர்களாவர். மாட்டுப் பொங்கலையொட்டி, தருமபுரம் கானான் இல்லத்திற்கு அருகில் உள்ள குளத்தில் தமது மாடுகளைக் குளிப்பாட்டிய பின்னர் நீராட முயன்ற சமயமே சேற்றில் புதையுண்டு இவர்கள் இருவரும் மரணமடைந்ததாகக் கூறப்படுகிறது. (உ-35)

பல்லார் முனியப்பயனில சொல்லுவான்
எல்லாரும் எள்ளப் படும். -குறள்

# வலம்புரி

## ஆராய்வதோடுமட்டும் நின்றுவிடாமல்.....

விடுதலைப்புலிகளால் முன்வைக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாணத்திற்கான இடைக்காலச் சபைத் திட்ட வரைபை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா ஆராய்ந்திருப்பது ஒரு முக்கியமான அம்சமாகும்.

அரசும் விடுதலைப்புலிகளும் நடத்திய சமாதான பேச்சுக்களின் ஒரு மைல்கல் என்று வர்ணிக்குமளவில் விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட திட்டவரைபு அமைந்துள்ளது.

கடந்த காலங்களில் சமாதானப் பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்ட போதிலும், விடுதலைப் புலிகளால் எழுத்து மூலமான திட்டவரைபொன்று சமர்ப்பக்கப்பட்டிருப்பது இதுவே முதற்தடவையாகும்.

எனினும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா, ஐக்கிய தேசிய முன்னணி அரசின் கீழ் இருந்த முக்கிய மூன்று அமைச்சுக்களைப் பறிமுதல் செய்ததன் விளைவாக சமாதானப் பேச்சுக்கள் முடங்கிப்போயின.

விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களை பிரதமரா? ஜனாதிபதியா? மீண்டும் ஆரம்பிப்பது எனற இழுபறிநிலையில், புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்கால சபைத் திட்டவரைபை ஜனாதிபதி ஆராய்ந்துள்ளமை அவரின் மனமாற்றத்தை வெளிக்காட்டி நிற்கின்றது.

விடுதலைப் புலிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்தவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவெனினும், தற்போதும் அந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் நடைமுறையில் இருப்பதற்கு ஜனாதிபதியின் ஒத்துழைப்பும் காரணமென்பதை மறந்துவிட முடியாது.

ஏனெனில், தற்போதைய சூழ்நிலையில், பாதுகாப்பு அமைச்சு என்பது ஜனாதிபதியின் பொறுப்பிலேயே போயுள்ளது. எனவே பிரதமரால் செய்யப்பட்ட யுத்த நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் பாதுகாப்பு அமைச்சை ஜனாதிபதி பொறுப்பேற்ற கையோடு செல்லுபடியற்றதாகிவிடும்.

எனினும், யுத்த நிறுத்த உடன்படிக்கையை விடுதலைப் புலிகள் ஒழுங்கு முறையாகக் கடைப்பிடித்து வருவதற்கு அமைவாக ஜனாதிபதியும் அதனை கடைப் பிடித்துவருகிறார்.

இலங்கைத் தமிழர்களைப் பொறுத்தவரை, காலத்திற்குக் காலம் ஆட்சி மாறிவரும் சிங்களத் தலைவர்கள் எல்லோரும் ஒரேகுட்டையில் ஊறிய மட்டைகளே. சிங்கள ஆட்சி எதுவாயினும், அவை தமிழ் மக்களுக்கு விரோதமாகவே செயற்பட்டுள்ளன.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவே சமாதானத்தன் ஆரம்பகர்த்தாவென்றோ, அல்லது பிரதமர் ரணில்தான் சமாதானத் தூதர் என்றோ புகழும் அளவில் தமிழ் மக்கள் இல்லை.

சிங்களத் தலைவர்களின் வாய்ப்பந்தல்களை நம்பி ஏமாந்த தமிழ்த் தலைமைகள் இப்போதில்லை. அந்தக் காலம் மலையேறிவிட்டது. இது விடுதலைக்காகத் தங்கள் உயிரைத் தியாகம் செய்து புதிய வரலாறு படைக்கும் புலிகளின் தலைமை.

எனவே அத்தலைமையை ஏமாற்றலாமெனத் தென்னிலங்கை ஆட்சியாளர்கள் மனக் கோட்டை கட்டுவார்களேயானால், அதனால் ஏமாற்றப்படுபவர்கள் தாங்களே என்பதைச் சிங்கள ஆட்சியாளர்கள் முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

இனவிவகாரத்தில் மக்கள் ஆணைபெற்ற-அதிகாரமுள்ளவர்களுடனேயே பேச்சுக்களை ஆரம்பிப்போமென விடுதலைப் புலிகள் கூறியிருப்பதற்குள் இருக்கக் கூடிய மறைமுகமான கருத்துக்கள் இங்கு நோக்குதற்குரியது.

அதாவது, பிரதமர் ரணிலோடுதான் சமாதானப் பேச்சை நடத்தவேண்டுமென்ற நிலைப்பாடு புலிகளுக்கோ, அன்றித் தமிழ் மக்களுக்கோ இல்லை. அதிகாரத்துடன் உள்ள ஆட்சியாளர்கள் எவராக இருந்தாலும். அவர்களுடன் பேசுவதற்குப் புலிகள் தயார். எனவே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுடனும் சமாதானப் பேச்சை நடத்துவதற்குப் புலிகள் தயாராக இருக்கின்றனர் என்பதை இது வெளிப்படுத்தியுள்ளது.

ஆனால், யாருடன் பேச்சை நடத்துவதாக இருந்தாலும் அது புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்கால சபைத் திட்டவரைபில் இருந்து ஆரம்பிக்கப்பட வேண்டும். அவ்வகையில் இந்த உண்மையை உணர்ந்து, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா புலிகளின் திட்டவரைபு குறித்து ஆராய்ந்திருப்பாராயின், ரணிலின் சமாதான முயற்சியில் இருந்து அவர் ஒருபடி முன்னேற வாய்ப்புண்டு. இதைவிடுத்துத் தன்னால் முன்வைக்கப்பட்ட உத்தேச அரசியல் யாப்பில் இருந்தே பேச்சைத் தொடருவேனென ஜனாதிபதி மீண்டும் கூறுவாராயின் அது அவரின் அறியாமையையேகாட்டும்

# விரைவில் நாடாளுமன்றக் கலைப்பு
# பெப்ரவரியில் பொதுத் தேர்தல்

## ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தகவல்

(கொழும்பு)

அடுத்தமாதம் ஜனாதிபதியால் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத் தேர்தல் நடத்தப்படும் என ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டதும் பொதுத் தேர்தல் நடைபெறும்" என ஜே.வி.பியின் பிரசார செயலர் விமல் வீரவன்ச அண்மையில் தெரிவித்திருந்த நிலையில் ஜே.வி.பியிற்கும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையே கூட்டமைப்பு ஒப்பந்தம் இன்று கைச்சாத்திடப்படவுள்ளது.

இவற்றை அடிப்படையாக வைத்தே மேற்படி தேர்தல் குறித்த செய்திகள் வெளியாகியுள்ளன.

இதேவேளை, ஜனாதிபதி நாட்டின் முக்கிய மூன்று அமைச்சுக்களையும் தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்திப் பொறுப்பேற்றுள்ளதையடுத்து அரசியலில் பெரும் இழுபறிகள் ஏற்பட்டுள்ளன.

இச் சூழ்நிலையில் பொதுத் தேர்தலை நடத்துவது சாத்தியப்பாடானது அல்ல என அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில்,. இம்மாத இறுதிப்பகுதியில் நாடாளுமன்றத்தை கலைத்து அடுத்தமாத முற்பகுதியில் பொதுத் தேர்தலை நடத்தும் உத்தரவை ஜனாதிபதி பிறப்பிப்பார். என ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது. (உ-4)

### விஜயகுமாரதுங்கவின் படுகொலை பற்றி
# சோமவன்சவை கைது செய்து விசாரணை நடத்த வேண்டும்
## காணி அமைச்சர் கருத்து

(கொழும்பு)

இலங்கை வரும் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் சோமவன்ச அமரசிங்காவை கைது செய்து விசாரணை செய்வதன் மூலம் விஜயகுமாரதுங்கவின் கொலை தொடர்பான பல தகவல்கள் கிடைக்கும் என காணி அமைச்சர் ராஜித சேனாரட்ண தெரிவித்துள்ளார்.

செய்தி நிறுவனம் ஒன்றுக்கு வழங்கிய விசேட பேட்டியிலேயே அவர் இந்தக் கருத்தினைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் கருத்து வெளியிடுகையில்,

மக்கள் விடுதலை முன்னணிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையே இன்று கைச்சாத்திடப்படவுள்ள கூட்டமைப்பு நிகழ்வுகளில் கலந்துகொள்வதற்காக அவர் இலங்கை வருகிறார்.

இலங்கை வரும் சோமவன்ச அமரசிங்காவை விசாரணை செய்வதன் மூலம், ஜனாதிபதியின் கணவர் விஜயகுமாரதுங்கவின் படுகொலைச் சம்பவம் தொடர்பாக அவருக்குத் தெரிந்த பல தகவல்களைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

இப்படுகொலைச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்தச் சூழ்நிலையில் கைது செய்து விசாரிப்பதன் மூலம் குறிப்பாக ஏனைய கொலைச் சம்பவங்கள் குறித்து அவரை விசாரணை செய்யாவிட்டாலும் தனது கணவர் என்ற ரீதியில் அவரை விசாரணை செய்யவேண்டும்.

சோமவன்ச விசாரணைக்கு உட்படுத்தப்பட்டால் எனது நெருங்கிய நண்பரான விஜயகுமாரதுங்க கொலை குறித்து பல உண்மைகள் வெளிவரும் என்றார். (தி-60)

## இந்தியப் பாதுகாப்பு அதிகாரி அடுத்தவாரம் இலங்கை வருகிறார்

(கொழும்பு)

இந்தியப் பாதுகாப்பு அதிகாரி ஒருவர் அடுத்த வார நடுப்பகுதியில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

அண்மையில் இந்தியாவுடனான பாதுகாப்பு ஒப்பந்தம் குறித்து முதற்கட்டப் பேச்சுவார்த்தை நடந்த இராணுவத் தளபதி லெப்ரினன் ஜெனரல் லயனல் பலகல்ல, ஜனாதிபதியின் கூட்ட ஆலோசகர் நைஜில்கற், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் ஆகியோர் இந்தியாவுக்குச் சென்று திரும்பினர்.

இப் பாதுகாப்பு ஒப்பந்தம் குறித்து இந்தியாவின் நிலைப்பாட்டை விளக்குவதற்காகவே உயர் அதிகாரி இலங்கை வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (தி-60)

## மீனவர்கள் மீட்ட ஓயிலை படையினர் பறித்தெடுத்தனர்

(திருநெல்வேலி)

சக்கோட்டைக் கடலில் மிதந்து வந்த 2 பெரல் ஓயிலை அப்பகுதியில் மீன் பிடித்துக்கொண்டிருந்த மீனவர்கள் மீட்டெடுத்தபோது அதனைப் படையினர் பறித்துச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தாங்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்த சமயம் ஓயில்கள் நிரப்பப்பட்ட 2 பெரல்கள் மிதந்து வந்ததாகவும் அதனைத் தாம் எடுத்துக் கொண்டு வீடுசெல்ல முற்பட்டபோது அங்கு வந்த படையினர் அதனைப் பறித்து தமது தேவைக்காக எடுத்துச் சென்றதாகவும் சக்கோட்டை மீனவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (உ- 43)

### திசரி தியானம்

### விவேகச் சிந்தனை

கண்ணுக்குப் புலப்படும் கடவுளாக விளங்கும் உன் சகோதரனையே நீ வழிபட முடியாவிட்டால் கண்ணுக்குப் புலப்படாமல் மறைந்திருக்கும் கடவுளை எப்படி நீ வழிபட முடியும்? இதுவே வேதாந்தம் அறிவுரையாக வழங்கும் செய்தியாகும்.

மனிதனுக்கு மன அமைதியைத் தருவது தான் மதத்தின் அடிப்படை இலட்சியமாகும்.

சுவாமி விவேகானந்தர்

## தேர்தல் முறை மாற்றம் குறித்து தெரிவுக் குழுவிடம் விளக்கம்

(கொழும்பு)

தேர்தல் முறையை மாற்றி அமைப்பது குறித்து, தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் தமது நிலைப்பாட்டை பாராளுமன்ற தெரிவுக் குழுவிடம் விளக்கவுள்ளனர்.

பாராளுமன்ற தெரிவுக்குழுவின் தலைவர் தினேஷ் குணவர்த்தனவை நாளை மறுதினம் சந்திக்கவுள்ள கூட்டமைப்பினர், மாற்றி அமைக்கப்படவுள்ள தேர்தல் முறைமை தொடர்பில் தமக்குள்ள கருத்து முரண்பாடுகளையும் அதற்குரிய நியாயப்பாடுகளையும் விளக்கமாகக் கூறவுள்ளனர்.

இச்சந்திப்பில் அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ், தமிழர் விடுதலைக்கூட்டணி, ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ் ஆகிய கட்சிகளின் சார்பில் அவற்றின் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன் போது இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் வரை தற்போதய தேர்தல் முறையில் மாற்றம் அவசியம் இல்லை என கூட்டமைப்பினர் சுட்டிக்காட்டுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, இது தொடர்பாக கடந்த வாரம் தமிழ் தேசியக் கூட்டமைப்பினரின் நிறைவேற்றுக் குழு கூடி ஆராய்ந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (உ-4)

## 16 வீடுகள் தீயில் நாசம்

(டிக்கோயா)

டிக்கோயா பட்டகல்ல தோட்டத்தில் 16 வீடுகளை கொண்ட தோட்டக் குடியிருப்பு ஒன்று நேற்றுமுன்தினம் எரிந்து முற்றாக நாசமாகியுள்ளது.

நண்பகல் வேளை திடீரென ஏற்பட்ட இத் தீ விபத்தினால் 60 பேர் தம் வீடுகளை இழந்துள்ளனர்.

இவர்களுக்கு குடியிருப்புக்களை மீள அமைத்துக் கொடுப்பதற்குரிய நடவடிக்கைகளில் வீடமைப்புப் பெருந்தோட்ட உட் கட்டமைப்பு அமைச்சு ஈடுபட்டுவருகிறது. (உ-4)

## ஏற்றுமதி வருமானம் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த வருடம் இலங்கையின் ஏற்றுமதி வருமானம், அதற்கு முந்திய அதாவது 2002 ஆம் ஆண்டை விடவும் அதிகரித்துள்ளது.

இந்த வகையில், 2002 ஆம் ஆண்டில் மொத்த வருமானத்தில் 5 வீதமாகக் காணப்பட்ட நாட்டின் ஏற்றுமதி வருமானம், கடந்த ஆண்டு 10 சதவீதமாக உயர்வடைந்துள்ளது.

இவ் அதிகரிப்பு விவசாய மற்றும் கைத்தொழில் ஏற்றுமதிப் பொருட்களின் மூலம் சாத்தியமாகியுள்ளது.

இதேவேளை, மேற்படி வருமானம் இவ் வருடம் இன்னும் அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ-4)

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு

# இரத்த சுத்திகரிப்பு இயந்திரம் நேற்று வழங்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

லண்டன் வாழ் இந்துக்களினால் யாழ்.போதனா வைத்திசாலையில் சிறுநீரகசிகிச்சைப்பிரிவுக்கு நவீன இரத்த சுத்திகரிப்பு இயந்திரம் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகனின் வேண்டுகோளுக்கு அமைவாக வே.சிவசுந்தரம் என்பவருடாகப் பெறப்பட்ட 17 லட்சம் ரூபா பெறுமதியான இவ்வியந்திரம் கையளிக்கும் வைபவம் நேற்று மாலை யாழ்.போதனா வைத்திய சாலையில் இடம்பெற்றது.

யாழ். போதனா வைத்திய சாலைப்பணிப்பாளர் வைத்திய கலாநிதி எஸ். சதுர்முகம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி பிரதம விருந்தினராக கலந்து கொண்டார் அத்துடன் இரத்த சுத்திகரிப்பு இயந்திரத்தினை சம்பிரதாய பூர்வமாக நாடாவை வெட்டி திறந்து வைத்தார்.

தொடர்ந்து நல்லை ஆதீன முதல்வரின் ஆசியுரை இடம்பெற்றது வைத்திய கலாநிதி பேரானந்தராஜா, செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன் உட்பட பலர் உரையாற்றினர்.

நிகழ்வில் வைத்தியர்கள், தாதியர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (த-3)

# கிணற்றில் இருந்து ஆர்.பி.ஜி ஷெல் மீட்பு

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை 3ம் குறுக்கு உப்புக்குளம் வீதியிலுள்ள வீட்டுக் கிணறொன்றில் இருந்து 150 மேற்பட்ட ஆர்.பி.ஜி ஷெல்கள் மீட்கப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டது.

மேற்படி வீட்டின் கிணறு இறைக்கப்பட்ட போதே ஷெல்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இதனை அடுத்து அப்பகுதி கிராம சேவகர் ஊடாக வெடிபொருள் மீட்புப் பிரிவினருக்கு அறிவிக்கப்பட்டு கிணற்றில் இருந்து ஷெல்கள் மீட்கப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டது. (இ-51)

# அதிகாரமுடைய...

கூடிய ஆரோக்கியமான புறநிலைகளை தோற்றுவிக்கப் போவதில்லை.

இந்நிலையில் இலங்கை அரசாங்கத்தை மீண்டும் சமாதான முயற்சிகளுக்கு கொண்டு வரும் வல்லமையும் ஆற்றலும் சக்தியும் சர்வதேச சமூகத்துக்கே உண்டு. சமாதான முயற்சிகளில் ஏற்படுகின்ற முன்னேற்றகரமான செயற்பாடுகளின் அடிப்படையில் சர்வதேச சமூகத்தால் இலங்கை அரசுக்கு வழங்கப்பட்டுள்ள நிதியானது சமாதானத்தில் ஏற்படும் முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்டே வழங்குவதற்கு வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இலங்கை அரசை மீண்டும் சமாதானப் பேச்சுக்கு கொண்டுவர அழுத்தங்களை சர்வதேச சமூகம் பிரயோகிக்க வேண்டும்.

சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமாகி இடைக்கால தன்னாட்சி குறித்து பேச்சுக்களை மேற்கொண்டு முடிபுகளை எட்டுவதற்கு காலதாமதமாகி வருகிறது. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை மோசமாகி வருகிறது அவர்களின் வாழ்க்கைப் பிரச்சினை மனிதாபிமான முறையில் தீர்க்கப்படவேண்டும்.

மக்களின் மீள்குடியேற்றம் புனர்வாழ்வு போன்ற பாரிய மனிதநேயப் பிரச்சினைகளையும் எதிர் கொள்ள வேண்டியுள்ளது இவற்றுக்கு உடனடியாகப் பரிகாரம் காணப்பட வேண்டும் என்று கூறிய சு.ப.தமிழ்ச்செல்வன் தென்னிலங்கையின் அரசியல் இழுபறிநிலையிலும் சர்வதேச நாடுகள் இக்கூட்டத்திற்கு சமூகம் அளித்திருப்பது முக்கியத்துவம் வாய்ந்த ஓர் நிகழ்வாகும் என்றும் குறிப்பிட்டார் (ம)

யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறைக்கு

# தெரிவான 19 மாணவர்களின் விபரம் வெளியிடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக வணிகத் துறைக்கு மேலும் 19 மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களின் பெயர் விபரங்களை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நேற்றுப் பிற்பகல் 4 மணிக்கு தொலை நகல் மூலம் யாழ்.பல்கலைக்கழகத்துக்கு அனுப்பி வைத்துள்ளது.

இவர்களுக்கான பதிவுகள் 21 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டு விரிவுரைகள் எதிர்வரும் 26 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதாக யாழ். பல்கலைக்கழகப் பதிவாளர் தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழக வணிகத் துறைக்கு 10 மாணவர்களின் பெயர்கள் ஏற்கனவே தெரிவுசெய்யப்பட்டிருந்தது. அம்மாணவர்களுடன் விரிவுரைகளை மேற்கொள்ள முடியாது என யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் எஸ்.மோகனதாஸ் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுக்கு தெரியப்படுத்தியதை அடுத்து மேலதிகமாக மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். தெரிவுசெய்யப்பட்ட 19 மாணவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு:

யு.உதயரமேஸ் - தாளையடி, பி.பிரதீப்காந் - திருநெல்வேலி, என்.கஜந்தினி - யாழ்ப்பாணம், என்.மாணிக்கம் - கைதடி கிழக்கு, என்.இரத்தினசிங்கம் - கரம்பொன் கிழக்கு, கே.தர்மித் - நல்லூர், எக்ஸ்.பிரதீப் - கொழும்புத்துறை, எஸ்.திவாகரன் - கொடிகாமம், ஆர்.பிரகாஷ் - அளவெட்டி, ரி.சுரேகா - அல்வாய் தெற்கு, எம்.அப்பையா - அளவெட்டி வடக்கு, எஸ்.இலக்ஸ்மன் - உரும்பிராய் தெற்கு, ரி.பிரியதர்சினி - அச்சுவேலி, எஸ்.நிமலி - புலோலி கிழக்கு, என்.சந்திரகுமார் -மயிலிட்டி வடக்கு, எஸ்.திபேஸ்வரன் - மன்னார், வி.கே.பெர்ணான்டோ - மன்னர், சி.எஸ்.சாந்தியோகு மன்னார், பி.டினேஸ்குமார் - மன்னார். (ச-3)

# நூலகத்தை திறப்பது குறித்து நேற்று கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். பொது நூலகத்தை திறப்பது குறித்த கலந்துரையாடலொன்று நேற்று யாழ். பல்கலைக் கழகத்தில் நடைபெற்றது.

யாழ்.மாநகரசபை ஆணையாளர் இ.இராமலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான மாவை சேனாதிராசா, கஜேந்திர குமார் பொன்னம்பலம் மற்றும் நூலகப் பொறுப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நூலகப் பராமரிப்புக்கு மாதம் ஒன்றுக்கு 5 லட்சம் ரூபா தேவைப் படுவதால் அதனை திறைசேரியிடம் இருந்து பெற்றுத்தர நடவடிக்கை எடுக்குமாறு இக்கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (இ-16)

# அபிராமிப்பட்டர் விழா

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஸ்ரீ தர்க்காதேவி தேவஸ்தானத்தில் நாளை புதன் கிழமை பி.ப 3.00 மணிக்கு அபிராமிப்பட்டர் விழா நடைபெறவுள்ளது.

அபிராமி அந்தாதி ஓதல், பட்டர் எழுந்திருக்கும் உறித் தரிசனம்,பட்டருக்கு அம்பாள் காட்சி கொடுத்தல்,பூரணை நிலவுத் தரிசனம் அம்பாளுடன் அபிராமிப்பட்டர் திரு வீதியுலா வருதல் ஆகியன அன்றைய தினம் இடம் பெறவுள்ளன. (உ)

# கலந்துரையாடல்கள்

(யாழ்ப்பாணம்)

கூட்டுறவு மாதத்தைஒட்டி நல்லூர் ப.நோ.கூ. சங்கம் கிளைக்குழு ரீதியாக கலந்துரையாடல்களை நடத்தி கூட்டுறவில் விழிப்புணர்வை ஏற்படுத்தி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளைரீதியாக நடத்தப்பட்டு வரும் கலந்துரையாடல்களில் அப்பகுதி மக்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு வருகிறார்களென சங்கத் தலைவர் பெ.கனகசபாபதி தெரிவித்துள்ளார். (ம)

# உடன்படிக்கை

(மருதங்கேணி)

வடகிழக்கு கரையோர சமூக மீளளிப்புச் செயற் திட்டம் (நெக்டெப்) தொடர்பான உடன் படிக்கை ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் வடகிழக்கு மாகாண சபைக்கும் இடையில் இம்மாத இறுதியில் கைச்சாத்திடப்பட இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் இச் செயற் திட்டம் வடகிழக்கு மாகாணத்தின் அனைத்து மாவட்டங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. (உ-35)

# ஜனாதிபதி....

பங்களை பெறும் நடவடிக்கையில் அரச தரப்பு ஈடுபட்டுவருவதாகக் கூறப்படுகின்றது.

இதேவேளை, ஜனாதிபதி சந்திரிகா ஐக்கிய தேசிய முன்னணி அரசின் மூன்று அமைச்சுக்களைப் பறித்ததினால் ஏற்பட்ட அரசியல் நெருக்கடிகளுக்கும் அதிகாரப் போட்டிக்கும் சுமுகமான தீர்வொன்றைக் காணும் முயற்சியில் ஈடுபட்டு வந்த மனோதித்தவெல-மலிக் சமரவிக்கிரம தலைமையிலான குழுக்கள் இன்று மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிக்கவிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (த)


M.A., M.COM

(காமராஜர் பல்கலைக் கழகம் மதுரை)

- மேற்குறிப்பிட்ட பட்ட பாடநெறிக்கு பல்கலைக்கழகத்தினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
- பல்கலைக் கழகப் பதிவுகள் எமது நிறுவனத்தினால் செய்து தரப்படும்.
- பட்டதாரிகள் மட்டுமே விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவர்.
- விண்ணப்ப முடிவு திகதி: 31-01-2004.
- விரிவுரைகள் ஆரம்பம் 01-02-2004 (ஒரு மணி)
- கீழ்க்காணும் பாடங்களில் ஒன்றை மட்டுமே தெரிவு செய்யலாம்.

1. தமிழ். 2. சமய தத்துவம். 3. ஆங்கில இலக்கியம்.
4. பொருளியல். 5. அரசியல். 6. சமூகவியல். 7.பொது நிர்வாகம்.
8. இதழியலும் தகவல் தொடர்பாடலும்.

குறிப்பு: இவற்றுக்குரிய பரீட்சைகள் இலங்கையில் நடைபெறும்.M.COM(ஆங்கிலம்,தமிழ்) இருமொழிகளிலும் ஆரம்பமாகின்றன.

யாழ்.இணைப்பாளர்

புதிய உயர் கல்லூரி

[C/7191] ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

மிக விரைவில்

உங்கள் வலம்புரியில் எதிர்பாருங்கள்

விவாத அரங்கு

கருத்துச் சங்கமம்

மாணவர்களின் கல்வி வீழ்ச்சிக்குக் காரணம்

ஆசிரியர்களா?

மாணவர்களா?

பெற்றோர்களா?

உங்கள் கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன

17ம் நாள் நினைவஞ்சலி



ஸ்ரீமாவடி தேவஸ்தான ஆஸ்தான வித்துவானும் தவில் மேதையுமான

காமாட்சிசுந்தரம் குகானந்தன்

(குகன்)

அவர்கள் 04-01-2004 அன்று காலமானதையிட்டு நாம் மிகவும் துயரடைகின்றோம். அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்து அவரது ஆத்மா சாந்திக்காக பகவானை வேண்டிப் பணிகின்றோம்.

ஸ்ரீ மாவடி ஞானவைரவர் தேவஸ்தானம்.

வெள்ளாந்தெரு யாழ்ப்பாணம்.

[8134]

கண்ணீர் அஞ்சலி



முத்தர் ஆண்டி

காரைநகர் பிரதேச செயலகத்தில் கடமை புரியும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகஸ்தர் ஆ.சிதம்பரநாதன் அவர்களின் அன்புத் தந்தை முத்தர் ஆண்டி அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் கண்ணீர் அஞ்சலியையும் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிச் சங்கம்,
பிரதேச செயலகம்,
காரைநகர்.

(C/7193)

மரண அறிவித்தல்

முத்தர் ஆண்டி

(பொன்னம்பலம் வீதி, காரைநகர்)

காரைநகர் பொன்னம்பலம் வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட முத்தர் ஆண்டி(19-01-2004) நேற்றுக் காலமானார். அன்னார் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் சரவணபவா, சறோஜா, தில்லைநாதன், சிதம்பரநாதன்(சமுர்த்தி வங்கி-காரைநகர்) ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று தகனக் கிரியைகளுக்காக சாம்பலோடை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ஆ.சிதம்பரநாதன்
(மகன்)
(சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்-காரைநகர்)

பொன்னம்பலம் வீதி,
காரைநகர்.

(C/7192)